Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 53 | திங்கட்கிழமை | தை 5 ஆம் நாள் 18 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

# ஐ.நாவை சமாளிக்க அரசு தகிடுதத்தம்!

## போர் தொடர்பான குற்றச்சாட்டுகளை ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு

## ஜெனிவா கூட்டத் தொடரில் அறிக்கை சமர்ப்பிக்கத் திட்டம்

## இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் உறுப்பினர்கள் பெயரிடப்படலாம்

கொழும்பு, ஜனவரி 18

இலங்கையில் இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்றன எனக் கூறப்படும் குற்றங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்கள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை மீண்டும் பரிசீலிக்கவும், இலங்கையின் சார்பில் இந்த முறை ஜெனிவா அமர்வில் யோசனை ஒன்றை முன்வைக்கவும் மூவர் அடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை அமைக்க ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தீர்மானித்துள்ளார். 19

## ஜெனிவாத் தலையிடிக்கு கோத்தா அரசே பொறுப்பு!



கொழும்பு, ஜன.18

ஜெனிவாவில் எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத்தொடரில் இலங்கைமீது நெருக்குவாரங்கள் அதிகரிக்கக் கூடும் என்று 19

## சுடப்பட்ட குடும்பஸ்தர் ஒரு வாரத்தின் பின் சாவு

வவுனியா, ஜன.18

இடியன் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவடைந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

வவுனியா, ஓமந்தை அரச முறிப்புப் பகுதியைச் சேர்ந்த தேவராசா ஜெயசுதன் (வயது-29) 19

## தவறான முடிவெடுத்து மருத்துவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஜன.18

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் மருத்துவர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது. 19

## டிப்பருடன் மோதுண்டு இளைஞர் உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஜன.18

முரசுமோட்டையில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கிளிநொச்சி, தருமபுரத்தைச் சேர்ந்த ஞா.நிதுர்சனன் (வயது-23) என்பவரே உயிரிழந்துள்ளார். 19

## பூநகரியில் பெண் வெட்டிக் கொலை

கிளிநொச்சி, ஜன.18

பூநகரியில் பெண் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். அவரது கணவர் சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று பூநகரி, தெளிய கரையில் நடந்துள்ளது. அந்த இடத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயான ரூபஸ் கிருஸ்ணகுமாரி (வயது-37) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார். 19

## வேகமாக அதிகரிக்கிறது வவுனியாக் கொத்தணி!

வவுனியா, ஜன.18

வவுனியாவில் நேற்று மேலும் 24 பேர் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். வவுனியா நகரத்தில் வர்த்தக நிலையங்களில் பணியாற்றுபவர்களே தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். 16

## 10 வயது சிறுமிக்கும் தொற்று

வவுனியா, ஜன.18

வவுனியாவில் 10 வயதுச் சிறுமி ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கில் உள்ள 19

## பொங்குதமிழ் எழுச்சி: 20 ஆண்டுகள் நிறைவு



யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மக்கள் பேரெழுச்சியாகத் திரண்ட பொங்குதமிழ் பிரகடனத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு நேற்றாகும்.

தமிழ் மக்களின் அபிலாசைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம் 19

## காணி அபகரிப்பை தடுக்க மண்டைதீவில் திரளுங்கள்!

### பொதுமக்கள், அரசியல் தலைவர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்ப்பாணத்தில் மண்டைதீவு மற்றும் மண்கும்பான் பகுதிகளில் கடற்படையினரின் முகாம் அமைப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ள காணி சுவீகரிப்பை முறியடிக்க இன்று பொதுமக்கள், மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் மண்டைதீவில் அணிதிரள வேண்டும் என்று வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜ 19

## வடக்கில் 8 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஜன.18

வடக்கில் நேற்று 8 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மன்னார் 19

# பேக்கரி உற்பத்திகளின் விலைகள் அதிகரிக்கும்

கொழும்பு, ஜன.18

**எதிர்வரும் வாரங்களில் பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகளை 10 ரூபாவால் அதிகரிக்க நேரிடும் என்று அனைத்து இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இறக்குமதி செய்த ஒரு லீற்றர் பாம் எண்ணெய்க்கு 250 ரூபா தீர்வை விதிக்கப்பட்டுள்ளதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அந்தச் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது ஒரு லீட்டர் பாம் எண்ணெய் விலை 500 ரூபாவைக் கடந்துள்ளது. பேக்கரி உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் மாஜரின் ஒரு கிலோ 600 ரூபாவைக் கடந்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் மாஜரினுக்கு 400 ரூபா இறக்குமதி வரி விதிக்கப்பட்டுள்ளது.

அதனால் பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலையை 10 ரூபாவால் அதிகரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. என்றார். (எ-இ)

# சுவிஸ் போதகர் திடீர் உயிரிழப்பு



யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த போதகர் சற்குணராஜா சுவிஸ்லாந்தில் உயிரிழந்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அவரது சபையைச் சேர்ந்த போதகர் ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

1959ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்த அவர் 1980ஆம் ஆண்டு ஜேர்மனிக்கு இடம்பெயர்ந்து, 1982இல் சுவிஸ்ஸர்லாந்தில் நிரந்தர வதிவிடத்தைப் பெற்றார் அங்கு மதபோதகராக பணியாற்றி வந்த நிலையில், திடீரென உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் யாழ்ப்பாணம் வந்த போதகர், அரியாலையில் மத வழிபாடு ஒன்றை நடத்தி, மீண்டும் சுவிஸ் திரும்பினார். இந்த நிலையில், அவருக்கு அங்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டன. அதையடுத்து அவர் நடத்திய நிகழ்வில் பங்கு பற்றியவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டது.

அவர்களில் தாவடியைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. குறித்த நபரே வடக்கின் முதலாவது கொரோனாத் தொற்றாளர் என்று அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது (ப)

# ரூ.15 இலட்சம் பெறுமதியான மரப் பலகைகள் மீட்பு!

கொழும்பு, ஜன.18

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக எடுத்துச் செல்லப்படவிருந்த சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான மரப் பலகைகளை கண்டி வனபரிபாலன அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

வன பரிபாலன அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில், கண்டி கொஹாகொடைப் பிரதேசத்தில் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

கண்டியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இவை எடுத்துச் செல்லத் தயார் நிலையிலிருந்தபோதே கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட பொருள்களில் 578 மகோகனி மரக்குற்றிகள், 217 சீவப்பட்ட மாமரக் குற்றிகள், 267 சீவப்பட்ட துரியன் பலகைகள் மற்றும் 347 பல்வேறு வகையான பலகைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (ற-இ)

# எம்.ஜி.ஆரின் பிறந்ததின நிகழ்வு யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 18

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய பிரபல நடிகருமான எம்.ஜி.இராமசந்திரனின் 103ஆவது பிறந்த தினம் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கொண்டாடப்பட்டது.

எம்.ஜி.இராமசந்திரனின் தீவிர இரசிகனும் நண்பருமான யாழ்.எம்.ஜி.ஆர். என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கதின் ஏற்பாட்டில் இந்த பிறந்தநின நிகழ்வுகள் யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலை அணிவித்து தீபம் காட்டி அஞ்சலி செலுத்தி பிறந்த தினத்தை நினைவுகூர்ந்தார்.

இந்த நிகழ்வில் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் ரா.செல்வராஜா மற்றும் யாழ். எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை கோப்பாய் சுந்தரலிங்கம் தனது சொந்த நிதியில் வழங்கி இனிப்பு பண்டங்களையும் பரிமாறினார்.

எம்.ஜி.ஆரின் பிறந்த தின நிகழ்வு வல்வெட்டித்துறை ஆலடியிலுள்ள எம்.ஜி.ஆர் சதுக்கத்திலும் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர். (த-வ-20)





# மட்டக்களப்பில் முடக்கப்பட்டது அரசடி கிராமம்

மட்டக்களப்பு, ஜன.18

மட்டக்களப்பு நகரின் அரசடி கிராம சேவையாளர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு அரசடி சந்தை வீதியில் உள்ள வீட்டிலுள்ள 79 வயதுடைய ஆண் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் ஐந்து பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்தே அரசடி கிராம சேவையாளர் பிரிவு முடக்கப்பட்டுள்ளது.

மேலும், மட்டக்களப்பு பொதுச்சந்தை மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம், வீதிப் போக்குவரத்து அனுமதி வழங்கும் காரியாலயம் என்பனவற்றுக்கு செல்லும் வீதிகள் முடக்கப்பட்டுள்ளன. கடந்த 24 மணித்தியாலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 27 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதையடுத்து மட்டக்களப்பில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 467ஆக அதிகரித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-150)

# கொரோனாத் தொற்றால் 8 பேர் நேற்று உயிரிழப்பு

கொழும்பு, ஜன.18

நாட்டில் கொவிட்-19 நோயால் மேலும் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அறிவித்துள்ளது. இதன் மூலம் நாட்டில் கொவிட்-19 நோயால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 264ஆக உயர்வடைந்துள்ளது.

நாடு முழுவதும் நேற்று கொரோனாத் தொற்றாளர்கள் என 749 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 53 ஆயிரத்து 62 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 7 ஆயிரத்து 635 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகின்றனர். 264 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப)




# உப உணவுப் பயிர்கள் அழிவு: விவரம் திரட்டும் அதிகாரிகள்

வன்னேரிக்குளம், ஜன. 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்த பெரும் மழை காரணமாக அழிவடைந்த உப உணவுப் பயிர்கள் தொடர்பான விவரங்களை மாவட்ட விவசாயத் திணைக்களம் திரட்டி வருகின்றது.

இலங்கையில் நிலக்கடலை அதிகளவில் உற்பத்தி செய்யப்படும் இடம் முல்லைத்தீவு மாவட்டம். இதனைவிட ஏனைய உப உணவுப் பயிர்களான உழுந்து, கௌபி மற்றும் பயறு ஆகியன அதிகளவில் பயிரிடப்படுகின்றன. இந்த நிலையில் தொடர்ச்சியான மழை காரணமாக உப உணவுப் பயிர்ச் செய்கைகளுக்கு அழிவுகள் ஏற்பட்டுள்ளன என்று செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். அறுவடைக்குத் தயாரான உப உணவுப் பயிர்கள் கூட மழை வெள்ளத்தால் அழிந்துள்ளன என்றும் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கடந்த காலங்களில் உப உணவுப் பயிர்களுக்கு அழிவுகள் ஏற்பட்டபோது பதிவுகளை மேற்கொண்ட அதிகாரிகள் இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுக்கவில்லை என்றும் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

உப உணவுப் பயிர்ச்செய்கை அழிவால் பெரும்நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் கூடுதலான விலையிலேயே உப உணவுப் பயிர் விதைகளை வாங்கி பயிர்ச்செய்கையில் ஈடுபட்டோம் என்றும் உப உணவுப் பயிர்ச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். (த-ரி2)

# 'உள்ளே இருப்பது நெருப்பு' நூல் அறிமுக நிகழ்வும் 'உதய வாசல்' ஆரம்பமும்

வசீகரன்



சிலமாதங்களின் பின்னர் ஒரு புத்தக வெளியீட்டு நிகழ்வு இணையவழி அல்லாமல் நடைபெற்றது. உதயன் பத்திரிகை காரியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 'உதய வாசல்' என்னும் சிறு அரங்கில் கடந்த 10 ஆம் திகதி மாலை நான்கு மணியளவில் ஊடகவியலாளர் 'தேவி பரமலிங்கம்' அவர்களின் 'உள்ளே இருப்பது நெருப்பு' என்னும் சிறுகதைத் தொகுப்பு வெளியிட்டு வைக்கப்பட்டது.

'ஈழத்து மூத்த மற்றும் நலிந்த எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் அவர்களுக்கான உரிய கௌரவத்தை அளிக்கும் முகமாகவும் இந்த உதய வாசல் உதயனால் தொடங்கப்பட்டுள்ளது. இனி வரும் காலங்களில் மாதமிருமுறை புத்தக வெளியீடுகள், நிகழ்வுகள் இங்கு இடம்பெறும், என்று உதயவாசல் ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டது. குறிப்பிட்டார். தொடர்ந்து நிகழ்வை யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறைத் தலைவர் கலாநிதி சி.ரகுராம் தலைமை தாங்கி நடத்தினார். மங்கள விளக்கேற்றல், வரவேற்புரை என்பவற்றைத் தொடர்ந்து புத்தக அறிமுக உரை இடம்பெற்றது. புத்தகத்தின் முதலாவது பிரதியை செல்வி லக்ஷ்மி சரவணபவனும், சிறப்புப் பிரதிகளை பேராசிரியர் க.தேவராஜா, எழுத்தாளர் நா.யோகந்திரநாதன், அ.கிருபாகரன், சி.சண்முகநாதன் ஆகியோர் பெற்றுக்கொண்டார்கள். உதயன் ஆசிரியர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், ஆகியோர் நூல்பற்றி உரையாற்றினார்கள். சட்டத்தரணி சோ.தேவராஜா, யாழ். மாநகர சபை ஆணையாளரும் கவிஞருமான த.ஜெயசீலன் ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தி னார்கள். தொடர்ந்து நூலாசிரியரை, உதயன் பத்திரிகை நிர்வாக இயக்குநர் சரவணபவனும், பிரதம விருந்தினரான உதயன் ஸ்தாபக பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாத னும், தமிழ் விக்கிப்பீடியா மயூரநாதனும் கௌரவித்தார்கள். பின்னர் ஏற்புரையை நூலாசிரியர் தேவி மகாலிங்கம் நிகழ்த்தினார். நன்றியுரையை கணபதி சர்வானந்தா நிகழ்த்த, நிகழ்வு நிறைவுக்கு வந்தது.












## தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு கொடுப்பனவு

வவுனியா, ஜன. 18

வவுனியா, பட்டாணிச்சூர் கிராம அலுவலர் பிரிவில் தனிமைப்படுத்தப்பட்ட 864 குடும்பங்களுக்கு அரசின் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆம் திகதியில் இருந்து 14 நாள்கள் பட்டாணிச்சூர் பகுதி சுகாதார பிரிவினரால் முடக்கப்பட்டிருந்தது. அந்தப் பகுதியில் 960 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் அரச உத்தியோகத்தர்கள், ஓய்வூதியம் பெறுவோர் ஆகியோரைத் தவிர்ந்த 864 குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தினர் கிராம அலுவலர் ஊடாக மக்களின் வீடுகளுக்கு சென்று நேரடியாக கொடுப்பனவை வழங்கி வருகின்றனர். (ஒ.18)

# ஜனநாயக குரலை அடக்கும் செயற்பாடு

## உதயன் மீதான வழக்கை கண்டிக்கிறார் உறுப்பினர் டினேஸ்

**யாழ்ப்பாணம், ஜன. 18**

**தமிழ் மக்களின் ஜனநாயக குரலாகச் செயற்படும் உதயன் பத்திரிகை மீது, யாழ்ப்பாணப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தமையை கண்டிக்கிறேன் என, பருத்தித்துறை பிரதேச சபையின் உபதவிசாளர் கு.டினேஸ் தெரிவித்தார்.**

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாள் அன்று, அவரது ஒளிப்படத்துடன் செய்தியை வெளியிட்டமைக்கு எதிராக உதயன் பத்திரிகைக்கு எதிராக யாழ்ப்பாணப் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளையும், உரிமைப் பிரச்சினைகளையும் வெளிப்படுத்தும் உதயன் பத்திரிகைமீது வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளமையானது, தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையாகவே நான் பார்க்கின்றேன்.

மக்களின் கருத்துரிமையை அடக்கி ஒடுக்குகின்ற, ஜனநாயகத்தை வேரறுக்கும் செயற்பாடே இது.

ஒட்டுமொத்த தமிழ் இனத்தையும் மழுங்கடிக்கச் செய்யும் முயற்சியின் ஓர் அங்கமாகவே உதயன் மீதான வழக்குத் தாக்கல் அமைந்துள்ளது. இந்தச் செயற்பாட்டைக் கண்டிக்கின்றேன்' என்றார். (ஓ.5)

## இயங்கத் தொடங்கியது புதுக்குடியிருப்பு சந்தை

முல்லைத்தீவு, ஜன. 18

புதுக்குடியிருப்பு சந்தைக்குரிய வளாகத்தில் மரக்கறி மற்றும் மீன் வியாபாரிகள் சுகாதார முறைப்படி வியாபார நடவடிக்கைகளை நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு சந்தை வியாபாரிகள் கடந்த ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி மரக்கறி வியாபாரி ஒருவருக்கு கொரோனாத் தொற்று இனம் காணப்பட்டுள்ளதைத் தொடர்ந்து சந்தைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. தனிமைப்படுத்தப்பட்டு கடந்த 10 ஆம் திகதி வியாபார நடவடிக்கைக்குத் திரும்பியபோது, சந்தையைத் திறக்கவேண்டும் என்று சந்தை வியாபாரிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். கோரிக்கையை பிரதேச சபை ஏற்றுக்கொண்டு சந்தையை இயக்கும் தீர்மானத்தை புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி க்கு அனுப்பினர். எனினும், கொவிட் 19 தொற்று ஏற்படக்கூடிய அபாயநிலை அதிகரித்துக் காணப்படுவதால் பொதுச்சந்தை வளாகத்தை உடனடியாக மூடுமாறு எழுத்து மூலம் அறிவித்திருந்தார்.


இந்தநிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ள சந்தைகள் அனைத்தும் திங்கட்கிழமை (இன்று) தொடக்கம் இயங்கலாம் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்தார். அதனையடுத்து நேற்றுமுன்தினம் சந்தை அதே இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. (கு-19)

# ரஞ்சன் மீதான வழக்கை மீளப் பெறத் தீர்மானம்!

கொழும்பு, ஜன.18
சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க வுக்கு எதிராக நுகேகொட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டு வழக்குகளை மீளப் பெறுவதற்கு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே முடிவு செய்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மீதான அனுதாபத்தின் அடிப்படையில் இந்த முடிவை எடுத்தேன் என்று அமைச்சர் அளுத்கமகே தெரிவித்துள்ளார்.
ரஞ்சன் ராமநாயக்க தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளதால் நீதிமன்றங்களில் முன்னிலையாக முடியாது என்று கூறிய அமைச்சர், தனிமைப்படுத்தலை நிறைவு செய்த பின்னர் அவர் மீதான வழக்குகள் மீளப்பெற்றுக்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.
கடந்த அரசின் அரசியல் பழிவாங்கலுக்கு தான் இலக்காகியிருந்தாலும், அதற்குப் பதிலாக தான் அரசியல் பழிவாங்கலில் ஈடுபடப் போவதில்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ப)

## மணவாளக்கோல சிறப்பு வழிபாடு

யாழ்ப்பாணம், ஜன.18
நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தில் குடமுழுக்கு தின மணவாளக்கோலத்தை முன்னிட்ட சிறப்பு வழிபாடுகள் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.
இன்று காலை 9 மணிக்கு சிறப்பு பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி 108 சங்காபிஷேகம் நடைபெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஜ-17)



## ஐந்து மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

வவுனியா, ஜன.18
புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கு உதவி வழங்கும் திட்டத்தில், முதற்கட்டமாக புளியங்குளம் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் ஐவருக்கு புத்தகப்பை உள்ளிட்ட கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
இதற்கான நிதியுதவியை வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தைச் சேர்ந்தவர்கள் வழங்கினர். (க)

### வவுனியாவில்

# கொரோனாவால் மூடப்பட்ட பாடசாலைகள் இயங்கும்


வவுனியா, ஜன. 18

**வவுனியாவில் கொரோனாத் தொற்று அதிகரித்த நிலையில் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் இயங்கவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

வவுனியா நகரில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் நகரப் பகுதிகள் உட்பட 19 கிராம அலுவலர் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
இந்த நிலையில் குறித்த பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட அநேகமான பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கு முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதுவரை 175 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
இந்தநிலையில் நகரின் நிலை குறித்து வவுனியா மாவட்டச் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கலந்துரையாடல் நடைபெற்றிருந்தது.
அதன்படி கொரோனாத் தொற்றுக் காரணமாக மூடப்பட்ட அனைத்துப் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளும் இன்று திங்கட்கிழமை ஆரம்பிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.
நகரில் முடக்கப்பட்டுள்ள சில பகுதிகளை இன்று முதல் விடுவிப்பதற்கும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (த-110)

## 12 நாடுகளுக்கு பயணத்தடை; சவூதி அரேபியா அறிவிப்பு

கொழும்பு, ஜன.18
கொரோனாத் தொற்றுக்கு எதிரான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அனுமதியின்றி 12 நாடுகளுக்கு பயணம் செய்யக் கூடாது என்று சவூதி அரேபியா தனது மக்களுக்கு எச்சரித்துள்ளது.
அதிக ஆபத்துள்ள நாடுகளில் உள்ள மக்கள் உடனடியாக சவூதி அரேபிய தூதரகத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.
அனுமதிக்கப்பட்ட நாடுகளுக்கு பயணிக்க விரும்பும் சவூதி அரேபியர்கள், கொரோனா வைரஸ் நோய்க்கு எதிரான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பின்பற்றுவதை உறுதி செய்து, பாதுகாப்பற்றதாகக் கருதப்படும் பகுதிகளிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-இ)



## பி.சி.ஆர். சோதனைக்கு கூடாரங்கள் கையளிப்பு

சாவகச்சேரி, ஜன.18
வீதியோரங்களில் எழுமாறான பி. சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு உதவியாக ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கூடாரங்கள் வழங்கப்பட்டன.
இந்த கூடாரங்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தால் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. யாழ்ப்பாண மாவட்டத்தின் நுழைவாயில்களான எழுதுமட்டுவாள், கேரதீவு, சங்குப்பிட்டி ஆகிய இடங்களில் பிரதேச சுகாதார பிரிவினரால் எழுமாறான பி. சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
அவ்வேளையில் மழைபெய்யும் பட்சத்தில் பரிசோதனை மேற்கொள்வோரும், பரிசோதனைக்கு உட்படுத்துவோரும் மழையில் நனையும் நிலை காணப்பட்டது. இதனையடுத்தே இந்த கூடாரங்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-9)

# கொரோனா வைரஸ் பற்றிய முக்கிய தகவல்கள் தெரியாது!

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 18
வெளிநாடுகளுக்கு பயணிப்பதற்காக கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றிருப்பது தகுதியாகக் கருதப்படவில்லை என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.
கொரோனா வைரஸ் மற்றும் அதற்கான தடுப்பூசி குறித்த பல முக்கியமான தகவல்களை இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்று உலக சுகாதார அமைப்பின் அவசர நிலை நிர்வாகக்குழு தெரிவித்துள்ளது. இருப்பினும், கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதது சர்வதேச பயணத்தைத் தவிர்க்க ஒரு காரணமாக ஏற்க முடியாதென வலியுறுத்தப்பட்டிருந்தது.
உலக சுகாதார அமைப்பின் அவசர சேவைகளின் தலைவர் மருத்துவர் மைக் ரியன், புதிய கொரோனா வைரஸ் தொடர்பாக அனைத்து நாடுகளும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார். (த-இ)

## பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு வீடு

முல்லைத்தீவு, ஜன.18
முல்லைத்தீவு முத்தையன் கட்டு கிராமத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு பிரிட்டன் ஓம் சரவணபாபா அறக்கட்டளையால் வீடு அமைத்து வழங்கப்படவுள்ளது.
இதற்கான அத்திபாரம் இடும் நிகழ்வு தைப்பொங்கல் தினத்தன்று நடைபெற்றது. (ஜ)



# பாலையூற்று பூம்புகார் கிழக்கு பகுதி முடக்கம்

திருகோணமலை, ஜன. 18
திருகோணமலை பாலையூற்று பூம்புகார் கிழக்குப் பகுதியில் அதிகமான கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதால் நேற்று முன்தினம்- காலை முதல் குறித்த பகுதி முடக்கப்பட்டுள்ளது.
குறித்த பகுதியில் நகர சுத்திகரிப்பு தொழிலாளர்கள் அதிகம் வாழ்ந்து வருவதால், இது திருகோணமலைக்கான ஒரு கொத்தணி ஆக உருவாகக்கூடும் என்ற பயம் மக்கள் மத்தியில் ஏற்படுகிறது.
மேலும் நாளாந்தம் திருகோணமலை மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ள போதிலும், கடந்த சில நாளாக சுகாதார தரப்பினரிடமிருந்து உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெறுவதில் சிக்கல் நிலை காணப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உயிர்க்குமா ஆன்மா?


பொங்குதமிழ் என்பது தமிழினம் அவ்வளவு இலகுவாக மறந்துவிடக்கூடிய நிகழ்வல்ல. ஆயுதப் போராட்டத்தால் மட்டுமே உலகைத் திரும்பிப் பார்க்க வைத்த தமிழினம், ஒட்டுமொத்த மக்களின் ஜனநாயகப் பேரெழுச்சி ஒன்றின் ஊடாக கவனக் கோரலை உண்டுபண்ணியதாக பொங்கு தமிழ் அமைந்திருந்தது. 2001 ஆம் ஆண்டு, இராணுவ அடக்குமுறை யாழ்ப்பாணத்தில் உச்சம் பெற்றிருந்த தருணத்தில், சுயநிர்ணயம், மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் ஆகிய மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்து ஒலித்த குரல்களால் அதிகாரம் அச்சமடைந்து நேற்றோடு இருபதாண்டுகள் ஓடிவிட்டன.

பொங்குதமிழுக்கு யாழ்.பல்கலைக்கழக சமூகம் அடித்தளமிட்டாலும், அது தனியே பல்கலைக்கழகத்தின் குரலாக இல்லாமல், தமிழினத்தின் கூட்டுக் குரலாகவே வெளிப்படுத்தப்பட்டது. அந்த நிகழ்வில் பொதுமக்கள் கலந்து கொள்ள அரசபடைகள் தடைவிதித்து ஆயுதமுனையில் அச்சுறுத்தியபோதும், மக்களும், பொது அமைப்புகளும் நேரடியாகக் கலந்துகொள்ள முடியாவிட்டாலும் இதயபூர்வமாக பொங்குதமிழோடு இணைந்தே இருந்தார்கள். அதனாலேயே 2001 ஆம் ஆண்டு நிகழ்ந்த பொங்குதமிழ் ஆயிரக்கணக்கான பங்குபற்றாளர்கள் இல்லாவிடினும் மிகப்பெரிய அதிர்வொன்றை உலகப்பரப்பில் ஏற்படுத்தியது. முதலாவது பொங்குதமிழில் இருந்த உணர்வுபூர்வ மனோநிலை, பின்னர் நடந்த பொங்கு தமிழ் நிகழ்வுகளில் நீர்த்துப் போயிருந்தன.

பொங்குதமிழை அப்படியே பிரதிசெய்த 'எழுக தமிழ்' கூட, தமிழினத்தின் கூட்டுக்குரல் என்ற நிலையில் இருந்து விலகி, அரசியல் சாயம் பூசப்பட்ட தொனியிலேயே வெளிப்பட்டிருந்தது. அப்போதிருந்த போரியல் மற்றும் அரசியல் களநிலைகள், மக்களிடம் இருந்த ஒருமித்த தாயக நேசிப்பு, எது வரினும் நிகழ்வை நடத்தியே தீருவது என்ற தமிழினத்தின் ஓர்மம், சர்வதேச கரிசனை, உணர்வுபூர்வமான ஆதரவு போன்றன முதலாவது பொங்கு தமிழின் பேரெழுச்சிக்கு காரணமாக அமைந்திருந்தன. மீண்டும் கிட்டத்தட்ட அப்படி ஒரு புறச்சூழ்நிலை இப்போது கருக்கட்டத் தொடங்கியுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளி வாய்க்கால் தூபி இடிக்கப்பட்டமையும், அதன் பின்னரான மாணவர்களின் அகிம்சை வழியிலான உணவு தவிர்ப்புப் போராட்டமும், மக்களின் உணர்வு ரீதியான ஆதரவும் அதற்கான சில துலங்கல்களே. இந்தநிலையில் தமிழ் மக்களிடம் மீண்டும் துளிர்க்கத் தொடங்கியுள்ள உரிமைக் குரல்களை ஓரிடத்தில் குவியச்செய்து, அதன் மூலம் இன்னமும் நிறைவேறாக் கனவுகளாக இருக்கும் சுயநிர்ணயம், மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பவற்றுக்கான பேரொலியை எழுப்ப, தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகள் முனையவேண்டும். அதற்கு முன்னர் திசைக்கொரு பாதையில் பயணிக்கும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் மக்களினதும், தாயகத்தினதும் நலனுக்காக ஒரு பொதுக்கொள்கையோடு பயணிக்க முன்வரவேண்டும். மீண்டும் பொங்கு தமிழின் ஆன்மா உயிர்க்குமா?

## இன்றைய கருத்துச்சித்திரம்




நன்றி - அவந்த ஆட்டிகல

# 'சீல்' வைத்து மூடப்பட்டது பருத்தித்துறை திரையரங்கு

**யாழ்ப்பாணம், ஜன. 18**

**முன்அனுமதி பெறாது கொரோனா கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்காது இயங்கியது எனத் தெரிவித்து பருத்தித்துறை பகுதியில் இயங்கிய திரையரங்கு நேற்று "சீல்" வைக்கப்பட்டது.**

கொரோனாக் கட்டுப்பாடுகளை மீறி திரையரங்கில் மக்கள் கூடியுள்ளமை குறித்த படங்கள் சமூக ஊடகங்களில் வெளியான நிலையிலேயே சுகாதாரப் பிரிவினர் பொலிஸாரின் உதவியுடன் குறித்த திரையரங்குக்கு "சீல்" வைத்தனர்.

பருத்தித்துறைப் பகுதியில் அண்மையில் இரண்டு கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு அவர்களுடன் நேரடித் தொடர்புகளைப் பேணினரென 25க்கும் மேற்பட்டவர்கள் அவரவர்களின் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

அவர்களுக்கான பி.சி.ஆர். முடிவுகள் இன்னும் கிடைக்கப்பெறாத நிலையில், திங்கட்கிழமைவரை பருத்தித்துறையில் திரையரங்கைத் திறக்கவேண்டாம் என்று மாகாண சுகாதாரப் பணிப்பாளரின் ஆலோசனை பெற்று பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியாலும் பொதுச் சுகாதாரப் பரிசோதகராலும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. எனினும், அதனைமீறி நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணிக்கு திரையரங்கில் திரைப்படம் காட்சிப்படுத்தப்பட்டதோடு அங்கு தனியாள் இடைவெளி பேணப்படவில்லை, பார்வையாளர்கள் முகக்கவசங்களை உரியமுறைப்படி அணிந்திருக்கவில்லை, ஆபத்தான நிலையில் மக்கள் ஒன்றுகூட இடமளித்தமை ஆகிய காரணங்களால் திரையரங்குக்கு "சீல்" வைக்கப்பட்டது என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்தது.

(த-26)

# வான் கதவுகள் திறப்பதில் இராணுவத்தின் தலையீடு

முல்லைத்தீவு, ஜன. 18

முல்லைத்தீவு முத்துஐயன்கட்டுகுள வான் கதவுகள், மரபுரீதியான செயற்பாடுகளுக்கு முன்னரே இராணுவத்தினரால் திறந்து விடப்பட்டது சிவில் நிர்வாகத்துக்குள், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்குள் இராணுவத்தினருக்கு இடமளித்த இந்தச் செயற்பாட்டுக்கு பொதுமக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

கனமழை காரணமாக முத்துஐயன்கட்டுக் குளத்தின் நீர்மட்டம் 23.9 அங்குலத்துக்கு உயர்ந்தது. அதனையடுத்து குளத்தின் நான்கு வான்கதவுகளும் தலா 3 அங்குலம் அளவுக்குத் திறந்துவிடவேண்டிய நிலை ஏற்பட்டது. அந்தக் குளத்து நீரைத் திறந்துவிடுவதற்கு முன்னர் மரபுரீதியான செயற்பாடாக அங்கு பூசை நடைபெறுவது வழமை. அவ்வாறு பூசை நடைபெறமுன்னரே மரபுகளை மீறி இராணுவத்தினர் கதவுகளைத் திறந்துவிட்டுள்ளனர் என்று பொதுமக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.



இதேவேளை, இராணுவத்தினர் அவ்வாறு செயற்பட்டாலும்கூட தங்களுடைய மரபுரீதியான நிகழ்வுகளைச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் கோவிலிலிருந்து வருகை தந்த பிரதம குரு மற்றும் விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் சேர்ந்து சம்பிரதாயபூர்வமான நிகழ்வுகளைச் செய்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-19)

# புதுக்குடியிருப்பு பிரதேசசபையில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றம்

முல்லைத்தீவு, ஜன. 18

**உடையார்கட்டை தனிப் பிரதேச செயலகமாக மாற்றுதல், புதுக்குடியிருப்பு பிரதேச செயலரின், மக்கள் பிரதிநிதிகள் தொடர்பான அணுகுமுறைக்கு கண்டனம் மற்றும் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்டமைக்கு கண்டனம் ஆகிய மூன்று தீர்மானங்கள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற போது நிறைவேற்றப்பட்டுள்ளன.**



## உடையார்கட்டு தனிப் பிரதேச செயலகம்

சபையின் உறுப்பினர்களான ஆ.ஜோன்சன், க.விஜயகுமார் ஆகியோர் இந்தப் பிரேரணையை முன்வைத்தனர்.

க.விஜயகுமார், புதுக்குடியிருப்பு-பரந்தன் வீதியில் மஞ்சள் பாலத்தில் இருந்து விசுவமடு வரையில் புதிய பிரதேச செயலகத்தை உருவாக்க பொது அமைப்புக்கள் தீர்மானம் எடுத்துள்ளார்கள். இதனை ஆதரித்து கருத்து தெரிவித்த உறுப்பினர் சுரேஸ் வெலிஓயாவை தனிப் பிரதேசசெயலகம் ஆக்க முடியும் என்றால் இதனை ஏன் ஆக்க முடியாது என்று கேள்வி எழுப்பினார்.

உறுப்பினர் சி.குகநேசன், புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு கடற்கரையோரம் இல்லாத நிலை காணப்படுகின்றது. வலைஞர் மடத்தில் இருந்து சாலை தொடக்கம் 8 கிலோ மீற்றர் கொண்ட கரையோர பகுதியை சபையின் ஆளுகைக்குள் எடுக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உடையார் கட்டு பிரதேச செயலகம் உருவாக்க வேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

## முள்ளிவாய்க்கால் முற்றம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்திருந்த முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் இடிக்கப்பட்டதற்கு சபையின் உறுப்பினர்களால் ஏகமனதாக கண்டனம் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இந் நினைவு முற்றம் பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் கட்டிக்கொடுக்கப்படவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை உறுப்பினர் செ.பிறேமகாந் முன்வைத்தார்.

'முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை அழிப்பதால் தமிழர்களின் கனவுகளை அழித்துவிடமுடியாது. புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குள்ளேயே அரசால் தவறு இழைக்கப்பட்டுள்ளது. படையினர் மந்துவில் பொதுக்காணியில் போர் நினைவுச் சின்னத்தைக் கட்டியுள்ளார்கள். ஒரு நாட்டுக்குள் இரு தேசம் இருந்துள்ளது என்பதை எடுத்துக்காட்டும் வெற்றிச்சின்னமாகவே அமைக்கப்பட்டுள்ளது. படையினரின் வெற்றிச்சின்னத்துக்கு பிரதேச சபையின் எந்த வித அனுமதியும் பெறப்படவில்லை. அனுமதி இல்லாமல் பல்கலைக்கழகத்தில் கட்டப்பட்ட நினைவுச்சின்னத்தை அகற்ற முடியும் என்றால் ஏன் புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் படையினரின் வெற்றிச் சின்னத்தை அகற்றமுடியாது' என்று உறுப்பினர் சுரேஸ் கேள்வி எழுப்பினார்.

'எங்கள் நாட்டில் மட்டும் தான் இறந்த ஆன்மாக்கள் நிம்மதியாக உறங்க முடியாத நிலை உள்ளது. போரின் வடுக்கள் எங்கள் மண்ணிலிருந்து இன்னும் அழிக்கப்படவில்லை. இது மிகவும் மோசமான மனித உரிமை மீறல். இதற்கு எங்கள் இனத்தவர்களும் துணைபோகின்றார்கள் என்பது வெட்கித்தலைகுனிய வேண்டிய நிலை. இதற்கு வன்மையான கண்டனத்தை தெரிவிக்கின்றேன் என சபை உறுப்பினர் முகுந்த கஜன் தெரிவித்தார்.

## பிரதேச செயலரின் அணுகுமுறை

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளை அணுகும் விதம் கண்டிக்கத்தக்கது என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உறுப்பினர் சி.குகநேசனால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் கடந்த 4 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உபதவிசாளர் க.ஜெனமேஜெயந், புதுக்குடியிருப்பு கிராமிய அபிவிருத்தி சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் ஆகியவற்றின் வேண்டுகோளுக்கு அமைவாக பிரதேச அபிவிருத்தி தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலரை சந்திக்கச் சென்றுள்ளார்கள் பிரதேச செய்லாளர் உப தவிசாளரை வெளியில் செல்லுமாறும் அவருடன் சென்ற மக்களை வெளியே செல்லுமாறும் அரசியல் தரப்பினருடன் வந்தால் தான் பொது அமைப்புக்களுடன் பேசமுடியாது என்றும் கூறியுள்ளார். மக்களுக்காக பணி செய்ய வந்துவிட்டு மக்களை உதாசீனப்படுத்தும் பிரதேச செயலர் இந்தப் பிரதேசத்துக்கு தேவை இல்லை, என்றார்.

இந்தத் தீர்மானத்துக்கு இரண்டு உறுப்பினர்கள் எதிர்ப்பை தெரிவித்துள்ளதுடன் ஏனைய உறுப்பினர்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளராலும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள காணிப்பகுதி உத்தியோகத்தர்களாலும் சபையின் உறுப்பினர்கள் என்றுகூட இல்லாமல் அவமானப்படுத்தப்பட்டுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்கள்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுடன் அரச அதிகாரிகள் நடந்துகொள்ளும் விதம் குறித்து மாவட்டச் செயலாளர் வடமாகாண ஆளுநர் உள்ளிட்டவர்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்க சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒ-19)

# யாழ். நெற்செய்கையாளர்களிடமிருந்து 3,600 மெற்றிக்தொன் நெல்லை கொள்வனவு செய்யத்திட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 18

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து இந்தமுறை சுமார் 3 ஆயிரத்து 650 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது என்று மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது.**

**கமநல சேவைகள் திணைக்கள வழிகாட்டலின் கீழ் நெல் சந்தைப்படுத்தும் சபை இந்த மாதம் இறுதி வாரத்திலிருந்து நெல் கொள்வனவை ஆரம்பிக்கவுள்ளது.**

**இந்தமுறை யாழ். மாவட்டத்தில் சுமார் 2 ஆயிரத்து 600 விவசாயிகளிடமிருந்து, ஒரு கிலோ நாடு 50 ரூபாவுக்கும் ஒரு கிலோ சம்பா 52 ரூபாவுக்கும் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது எனவும் விவசாயப் பிரிவு தெரிவித்தது.**


(த-7)



# தலதா பொலிஸார் நால்வருக்கு தொற்று

கண்டி, ஜன.18

தலதா மாளிகை வளாகத்திலுள்ள பொலிஸ் நிலைய அதிகாரிகள் நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதையடுத்து அங்கு கடமையாற்றும் 200 பேர் வரை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் குறித்த பொலிஸ் நிலையத்தில் வேறு பொலிஸ் அதிகாரிகள் 180 பேர் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. (வ-இ)



# முல்லைத்தீவில் வெளிச்சவீடு அமைக்காததற்கு பொறுப்பு யார்?

குற்றஞ் சாட்டுகின்றனர் முல்லை மீனவர்கள்

முல்லைத்தீவு, ஜன. 18

முல்லைத்தீவு கடற்கரையில் வெளிச்ச வீடு அமைக்காததற்கு கடற்றொழில் திணைக்களமும் முல்லைத்தீவு மாவட்ட செயலகமுமே பொறுப்புக்கூற வேண்டும் என முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த பத்தாண்டுகளில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலும் முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்திலும் நடைபெற்ற கூட்டங்களில் முல்லைத்தீவு கடற்கரையில் வெளிச்ச வீடு அமைக்க வேண்டும். முன்பிருந்த வெளிச்ச வீடு 1996 ஆம் ஆண்டு போர் காரணமாக அழிவடைந்து விட்டது. தற்போது வெளிச்ச வீடு இல்லாததன் காரணமாக இரவு தொழிலுக்குச் செல்லும் கடற்றொழிலாளர்கள் கரைக்குத் திரும்புவதில் நெருக்கடி காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் வெளிச்ச வீடு அமைத்துத் தருமாறு கடந்த 10 வருடங்களாக மாவட்டச் செயலகத்திடமும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திடமும் தொடர்ச்சியாகக் கோரிக்கைவிடுத்தும் வெளிச்ச வீட்டை அமைப்பதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இதனால் கடலுக்குச் செல்லும் தொழிலாளர்கள் கரைக்குத் திரும்புவதில் தொடர்ச்சியாக நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். நவீன வசதிகள் கொண்ட மீன்பிடிப் படகுகள் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களிடம் இல்லை. எனவே விரைவில் வெளிச்சவீடு அமைத்துத்தருமாறு முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வெளிச்ச வீடு அமைக்குமாறு ஜனாதிபதி, பிரதமர், கடற்றொழில் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு மனுக்கள் கையளித்தும் பயன் ஏற்படவில்லை என்று கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (த-ரி2)

# கிழக்கு முனையம் தொடர்பான திட்டங்களை வழங்க அவகாசம்

**கொழும்பு, ஜன.18**
**கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பான தொழிற்சங்கங்களின் யோசனைகள் அடங்கிய திட்டத்தைக் கையளிப்பதற்கு காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.**

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும், அமைச்சின் அதிகாரிகள், துறைமுக அதிகார சபையின் அதிகாரிகள் மற்றும், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அங்கத்தவர்கள் ஆகியோருக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அமைச்சின் செயலாளர் யு.டி.சி.ஜெயலால் அதிகாரசபையின் தலைவர் ஜெனரல் தயா ரட்நாயக்க ஆகியோர் பங்கேற்ற கலந்துரையாடலே நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது தொழிற்சங்கத்தரப்பில், ஏற்கனவே ஜனாதிபதி முன்னிலையில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளான கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் ஒரு சதவீத பங்கையும் வெளிநாடுகளுக்கு வழங்கக்கூடாது. அதனுடைய பூரணமான முகாமை துறைமுக அதிகார சபையின் கீழ் இருக்க வேண்டும். அத்துடன் உள்நாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பில் அதன் அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும் என்பன வலியுறுத்தப்பட்டன. எனினும் இந்த விடயங்கள் தொடர்பில் ஆராய அமைச்சரவைக் குழுவொன்று நியமிக்கப்பட்டு அதனிடம் தொழிற்சங்கங்களின் யோசனைகள் அடங்கிய திட்ட வரைபை தயாரித்து கையளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. அதற்காக எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

(வ-இ)

# நாடாளுமன்ற ஊழியர்கள் நால்வருக்கு கொரோனா



கொழும்பு, ஜன.18
நாடாளுமன்ற ஊழியர்கள் நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார். அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹகீம் ஆகியோருக்கு அண்மையில் கொரோனாக் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் 31 பேரும், பணியாளர்கள் பலரும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இந்த நிலையில் நாடாளுமன்றில் சகலரும் பி.சி.ஆர்.பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டும் என சபாநாயகர் வலியுறுத்தியிருந்தார். அதற்கமைய கடந்த வியாழக்கிழமை 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாள்கள் 463 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில், எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. நாடாளுமன்ற பணியாளர்களுடன் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட 448 பேர் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவர்களில் ஐவருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இந்நிலையில் நேற்று நாடாளுமன்ற ஊழியர்கள் நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

(வ-இ)

# ரஞ்சனின் பதவியை காப்பாற்ற ஐ.ம.ச.முயற்சி!

கொழும்பு, ஜன.18
நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர்பில் சிறைத் தண்டனைக்கு உள்ளாகும் நாடாளுமன்ற உறுப்பினரின், நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்தாகும் என்பது பற்றி அரசமைப்பில் தெளிவான விளக்கங்கள் எதுவுமில்லை. எனவே சட்டத்தரணிகள் ஊடாக உரிய சட்ட ஆலோசனையைப் பெற்று ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமையைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் தெளிவின்மை காணப்படுகிறது. எனவே சட்டத்தரணிகளுடன் ஆலோசித்து இது குறித்து நியாயமான தீர்வொன்றை பெற்றுக் கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

இதற்கு முன்னர் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் சில நாடாளுமன்ற உறுப்பினர்களாலும், ஊடகங்களாலும், பத்திரிகைகளாலும், இணையத்தள ஊடகங்களாலும் கேள்விக்குட்படுத்தும் வகையில் செய்திகளும் கருத்துக்களும் வெளியிடப்பட்டன.

எனவே இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால் இது குறித்து நாம் மிக உன்னிப்பாக அவதானித்து உரிய நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளோம் -என்றார்.

(ற-இ)

# பொருளாதார வளர்ச்சிக்கு புதிய இலக்குகள் நிர்ணயம்

கொழும்பு, ஜன.18
பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கான புதிய இலக்குகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. இது கடன் வாங்குவதற்கான எந்தவொரு தேவையையும் உருவாக்காது. இப்போது இது மீட்புப் பாதையிலுள்ள நாட்டின் கடன் கூறுகளை மட்டுமே அதிகரிக்கும் என்று இராஜாங்க நிதி அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.

சமீபத்திய ஆண்டுகளில் நாடு மிக மோசமான புயல்களைக் கடந்துவிட்டதால், வெளிநாட்டு நன்கொடையாளர்களிடமிருந்து நிதியுதவி பெற வேண்டிய அவசியமில்லை என்றும், பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கான சிறந்த கொள்கைகளின் ஆதரவுடன் மீட்கும் பாதையிலுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் ஊக்குவிப்பதில் நாங்கள் கவனம் செலுத்துவோம், இது வேலைவாய்ப்பு மற்றும் கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்துவதில் இது பங்களிப்புச் செய்யும் எனவும் தெரிவித்தார்.

(ற-இ)

# ஒரே குடும்பத்தில் நால்வருக்கு தொற்று

கொழும்பு,ஜன.18
பண்டாரவளை கினிகமப் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் பெண்ணொருவருக்கு அண்மையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அவரது குடும்பத்தினருக்கு கடந்த 15 ஆம் திகதி பி.சி.ஆர்.பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

அதில் மூவருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து அவர்கள் கொரோனாச் சிகிச்சை நிலையங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் நெருங்கிய தொடர்புளைப் பேணியவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

(க-இ)



# சுற்றுலாவிகளின்றி வெறிச்சோடிய வன்னேரிக்குளம் சுற்றுலா மையம்

வன்னேரிக்குளம், ஜன. 18
வன்னேரிக்குளத்துக்கான முதன்மை வீதிச் சீரமைப்பு நிறைவடையாததால் வன்னேரிக்குளம் சுற்றுலா மையத்துக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவாகக் காணப்படுகின்றது என்று கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்தார்.

வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் கரைச்சி பிரதேச சபையால் பராமரிக்கப்படுகின்றது. ஒரு பணியாளர் சுற்றுலா மையத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். வன்னேரிக்குளத்திலிருந்து பல்லவராயன்கட்டு சந்தி ஊடாக ஜெயபுரம் வன்னேரிக்குளம் வரை வீதி வேலைகள் நடைபெறுகின்றன. அக்கராயனிலிருந்து வன்னேரிக்குளம் வரையான வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. கிளிநொச்சி நகரிலிருந்து வன்னேரிக்குளம் சுற்றுலா மையத்துக்குச் சென்றடைய இரு மணித்தியாலங்கள் தேவைப்படுகின்றன. வீதிகள் சீரமைக்கப்பட்டால் வன்னேரிக்குளம் சுற்றுலா மையத்துக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவார்கள். சுற்றுலா மையத்தை வடக்கு மாகாண சபை அமைத்துத் தந்தது. சுற்றுலா மையம் அமைந்திருக்கும் காணி நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உரியது. அந்தக் காணி பிரதேச சபையிடம் கையளிக்கப்படவில்லை.

என்று தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

(து-ரி2)

# இணைஅனுசரணை என்ற பேச்சுக்கே இடமில்லை

## வெளிவிவகார அமைச்சின் செயலர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன. 18**

**ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று வெளிவிவகார அமைச்சின் செயலர் அட்மிரல் ஜயனத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.**

இலங்கையுடன் சமரசமான தீர்மானமொன்றை ஏற்றுக் கொண்டால், அது இலங்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை எதிர்க்கவில்லை என்ற கருத்தை உருவாக்கும்.

இலங்கை, தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவது குறித்த கேள்விக்கே இடமில்லை. அவ்வாறானதொரு தீர்மானமே அரசின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது. அது அரசமைப்புக்கும் இறைமைக்கும் மக்களுக்கும் எதிராகக் காணப்பட்டது, என்று கொலம்பகே குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)



மன்னார் மாவட்டத்தில் பெருமாள் சிவகுமாரன் சேவைகள் அமைப்பின் ஊடாக கணேசபுரம், சேவாலயா, வெள்ளாங்குளம் மற்றும் இந்தியன் குடியிருப்பு ஆகிய இடங்களில் 248 மாணவர்களுக்கும், பாலியாற்றில் 118 மாணவர்களுக்கும் புதுக்குளத்தில் 32 மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச- 222)

## சட்டவிரோத மஞ்சள் பறிமுதல்

கொழும்பு, ஜன.18

கொழும்பு, தெமட்டகொட பகுதியில் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் எடுத்து வரப்பட்ட ஆயிரத்து 559 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்றுமுன்தினம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதன்போது இரு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும், மஞ்சள் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்திய லொறியொன்று கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் படையினர் தெரிவித்தனர். (ச-இ)

## மொரவெவ பிரதேச சபையின் புதிய தவிசாளராக ஜகத் குமார

திருகோணமலை, ஜன.18

திருகோணமலை மொரவெவ பிரதேச சபையின் புதிய தவிசாளராக டபிள்யூ. ஆர். ஜகத் குமார வேரகொட தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

2021 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது வரவு-செலவுத் திட்டம் கடந்த 15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்ட நிலையில், புதிய தவிசாளர் நியமனத்துக்கான வாக்கெடுப்பு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன் தலைமையில் பிரதேச சபைக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஜகத்குமாரவை தலைவராக நியமிக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர் சித்திரவேல் சசிகுமார் முன்மொழிய அதே கட்சியைச்சேர்ந்த உறுப்பினர் எம்.டி. ரத்னாயக்க வழிமொழிந்தார்.

இவரை நியமிப்பதில் ஆட்சேபனைகள் தெரிவிக்கப்படாமல் இவர் ஏகமனதாக தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன்போது அவர் தலைவராக நியமிக்கப்பட்டதையடுத்து, கட்சி பேதமின்றி, இன மத வேறுபாடின்றி பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் ஒவ்வொரு சபை உறுப்பினர்களும் தங்களது ஆலோசனைகளையும் திட்டங்களையும் எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் வழங்குமாறும் கேட்டுக்கொண்டார். (ற-இ)

## வெட்டுபுள்ளிகள் தொடர்பில் அதிகாரிகள் தெளிவுபடுத்துக!

### பந்துல தெரிவிப்பு

கொழும்பு, ஜன.18

கடந்த ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்பட்ட முறை தொடர்பில் கல்வி அதிகாரிகள் உடனடியாக விளக்கமளிக்க வேண்டும் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பிரபல பாடசாலைகளை வகைப்படுத்தி வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படும் முறையில் எவ்வித வெளிப்படைத் தன்மையும் இல்லை எனவும், நீண்டகாலமாக வெட்டுப்புள்ளி எதை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது என்பதில் சிக்கல் தன்மை இருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார். (ற-இ)

### அனுராதபுரம்

## சிறுவர் இல்லத்தில் கலாசார சீரழிவுகள்

கொழும்பு, ஜன. 18

அனுராதபுரத்தில் உள்ள சிறுவர் இல்லமொன்றில் கலாசாரச் சீரழிவுகள் இடம்பெறுகின்றன என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுவர் இல்லத்துக்குள் வெளியாரை அனுமதிப்பது, மது அருந்துவது, பாலியல் சீண்டல்கள் உள்ளிட்ட சட்ட முரண் மற்றும் கலாசார முரண் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இது தொடர்பில் ஏற்கனவே இரு பிரிவு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஐந்து சிறுமிகள் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## நீர்வழங்கல் அமைச்சில் எவருக்கும் தொற்றில்லை

கொழும்பு, ஜன.18

நீர்வழங்கல் அமைச்சின் ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்படவில்லை என நீர்வழங்கல் அமைச்சு அறிவித்துள்ளது.

நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அமைச்சின் செயலாளர் மற்றும் ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அந்த பரிசோதனை முடிவுகளின்படி, எவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்படவில்லை. மாகாண பிரதிநிதிகளும் தன்னார்வமாக பி.சி.ஆர். பரிசோதனை செய்து கொண்டனர் பரிசோதனை முடிவுகளின் படி, அவர்களுக்கு தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலின்படி, அமைச்சரவையின் பணிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என நீர்வழங்கல் அமைச்சு அறிவித்துள்ளது. (வ-இ)



## இந்தவாரம் மழை பெய்யாது; நெல் அறுவடைசெய்யுங்கள்

### கமநலசேவைகள் திணைக்களம் தெரிவிப்பு

வவுனியா, ஜன. 18

இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மழைக்கு வாய்ப்பில்லை என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. எனவே, இந்தக் காலப்பகுதியில் அறுவடைகளை மேற்கொள்ளுமாறு வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்பின்னர் எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மழை பெய்யும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. எனவே இந்த வாரத்தில் அறுவடை செய்யும் பருவத்திலுள்ள நெல்களை அறுவடை செய்யுங்கள் என்றும் கமநலசேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-110)

# வற்றாப்பளை ஊடாக பஸ் சேவை நடத்தவும்

## 2 கிராமங்களின் மக்கள் கோரிக்கை

**வன்னேரிக்குளம், ஜன. 18**

**முல்லைத்தீவு புதுக்குடியிருப்பிலிருந்து வற்றாப்பளை வழியாக முல்லைத்தீவு நகரத்துக்கு பஸ் சேவைகளை நடத்துமாறு புதுக்குடியிருப்பு மற்றும் கேப்பாப்பிலவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

முல்லைத்தீவு நகரத்திலிருந்து காலை 7 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் கேப்பாபிலவு வழியாக யாழ்ப்பாணத்துக்கு பஸ்கள் பயணிக்கின்றன. மாலை 4.30 மணிக்கு அதே வழித்தடத்தில் ஒரு பஸ் மட்டும் முல்லைத்தீவு நகரத்துக்குத் திரும்பும். இடைப்பட்ட நேரத்தில் புதுக்குடியிருப்பு மக்களோ கேப்பாப்பிலவு மக்களோ வற்றாப்பளை, முள்ளியவளை குறிப்பாக மாஞ்சோலையில் அமைந்துள்ள முல்லைத்தீவு பொது மருத்துவமனை மற்றும் முல்லைத்தீவு நகரத்துக்குச் செல்வதில் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

2009 ஆம் ஆண்டின் முன்னர் புதுக்குடியிருப்பு நகரத்திலிருந்து வற்றாப்பளை வழியாக முல்லைத்தீவுக்கு தொடர்ச்சியாக பஸ்கள் பயணித்தன.

தற்போது பஸ்கள் பயணிக்காததன் காரணமாக புதுக்குடியிருப்பு, கேப்பாப்புலவு, வற்றாப்பளை ஆகிய கிராமங்களின் மக்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். குறித்த வழித்தடத்தில் பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்த மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (து-ரி2)

# சர்வாதிகாரியாக நாட்டின் ஜனாதிபதி

## கூறுகிறார் நளின் பண்டார



கொழும்பு, ஜன.18

நாட்டின் ஜனாதிபதியானவர் ஜனநாயகம், மனித உரிமைகள் என்பவற்றை மதிப்பவராக இருக்க வேண்டும். மாறாக சர்வாதிகாரபோக்கில் பயணிப்பவராகவும் பாசிசவாதியாகவும் இருக்கக்கூடாது.

எனவே ஜனாதிபதியின் அந்தக் கொள்கைக்கு எதிராகப் போராடுவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார். மேலும் அரசியல் ரீதியாக அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பங்களிப்பு காணப்பட்டது. ஆனால் பாதுகாப்பு செயலாளரான கோத்தாபய ராஜபக்சவின் செயற்பாடுகள் விமர்சனத்துக்குரியனவாகவே இருந்தன என்றும் நளின் பண்டார சுட்டிக்காட்டினார். (ற-இ)



# அறநெறிப்பாடசாலைகள் நேற்று முதல் ஆரம்பம்

முல்லைத்தீவு.ஜன.18

மேல் மாகாணம் மற்றும் முடக்கப்பட்டுள்ள சில பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் அறநெறிப் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் நேற்று மீள ஆரம்பிக்கப்பட்டன.

கொரோனா வைரஸ் பரவலையடுத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட பௌத்த, இந்து, கத்தோலிக்க மற்றும் இஸ்லாம் அறநெறிப் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கு, மத கலாசார அலுவல்கள் அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைவாக முல்லைத்தீவு மாமடுச் சந்தி கற்பக அறநெறி பாடசாலையில் சமய முறைப்படி கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்து சமய முறைப்படி தைப்பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. மாணவர்களுக்கு அமுது வழங்கி கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. (க-70)



யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலயத்தில் பொங்கல் விழா சிறப்புற இடம்பெற்றது. (க)

# மூன்றாம் கட்டத்திலேயே ராஜபக்சக்களுக்கு ஊசி

கொழும்பு, ஜன. 18

இலங்கையில் கொரோனா வைரஸ் தடுப்பூசி செலுத்தும் மூன்றாம் கட்ட நடவடிக்கையின் போது, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் தடுப்பூசி செலுத்தப்படும் என்று ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார். தடுப்பூசி செலுத்தும் முதலாம் கட்ட நடவடிக்கையின் போது, சுகாதார ஊழியர்கள் உள்வாங்கப்படுவர் என்றும் இரண்டாம் கட்ட நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினர் உள்வாங்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மூன்றாம் கட்ட நடவடிக்கையில், 60 வயதுக்கும் மேற்பட்ட முதியவர்கள் உள்ளீர்க்கப்படுவர் என்றும் அதன்படி, ஜனாதிபதியும் பிரதமரும் மூன்றாவது சுற்றில் உள்ளானர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.இ)

# அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம்,ஜன.18

மருத்துவர் சி.மோகன் ஞாபகார்த்தமாக இளவாலை மக்கள் ஒன்றியத்தின் நிதிப்பங்களிப்பில், புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள உள்ளக விளையாட்டு அரங்குக்கான அடிக்கல் நாட்டும் விழா நாளை செவ்வாய்கிழமை முற்பகல் 11 மணிக்கு வாலிபத்திடலில் இடம்பெறும். சுமார் 5 மில்லியனுக்கு அதிகமான நிதித் திட்டமிடலுடன், கரப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், கபடி மற்றும் மேசைப் பந்து விளையாட்டுக் களுக்கான மைதானங்களை உள்ளடக்கி, விளையாட்ட ரங்கம் அமைக்கப்படவுள்ளது.(சு-222)

# சிறைக்கொத்தணி மேலும் அதிகரிப்பு

கொழும்பு.ஜன.18

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் மேலும் 17 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களில் 16 ஆண் கைதிகளும், சிறைச்சாலை அதிகாரியொருவரும் அடங்குவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சிறைச்சாலைக் கொத்தணியில் அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 310 ஆக உயர்வடைந்துள்ளது. இவர்களில் 123 சிறை அதிகாரிகளும், 3 ஆயிரத்து 945 கைதிகளும் பூரண குணமடைந்துள்ளனர். (க-இ)

# முள்ளிவாய்க்கால் தூபி இடிப்பு ; இந்தியத் தூதுவர் கடும் கரிசனை

கொழும்பு, ஜன. 18

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்திருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி கடந்த 8 ஆம் திகதி இரவோடு இரவாக தகர்க்கப்பட்ட செய்தியறிந்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அது தொடர்பாக கடுமையான கரிசனையை இலங்கை அரசிடம் வெளிப்படுத்தியுள்ளார் என ஆங்கில ஊடகமான 'சண்டே ரைம்ஸ்' அதன் அரசியல் பத்தியில் குறிப்பிட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற மறுநாள், பிரதமர் மஹிந்த ராஜபக்சவை தொடர்புகொள்வதற்கு கொழும்பிலுள்ள இந்தியத்தூதரகம் பகீரதப்பிரயத்தனத்தை மேற்கொண்டிருந்தது. அப்போது பிரதமர் தனது தேர்தல் தொகுதியில் இருந்துள்ளார்.

பிரதமர் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு திரும்பியதையடுத்து விஜேராமயிலுள்ள அவரது இல்லத்துக்கு விரைந்த இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தகர்க்கப்பட்டமை குறித்து ஆழ்ந்த கரிசனையை வெளியிட்டிருந்தார். இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ பயணம் நிறைவடைந்த மறுதினம் நிகழ்ந்த இந்தச் சம்பவம், தமிழ் நாட்டில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் கிளர்ந்தெழுவ தற்கு வழிகோலும் எனவும் பிரதமரிடம் இந்தியத் தூதுவர் கூறியிருந்தார் என அறியமுடிகிறது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியத் தூதுவரின் கரிசனையை அடுத்து பிரதமர் உடனடியாக செயலில் இறங்கியிருந்தார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்கவும், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சிவக்கொழுந்து சற்குணராஜாவும் கடந்த திங்கட்கிழமை அதிகாலை வரையில் ஒருவருடன் ஒருவர் தொடர்பாடலில் இருந்து பதற்றநிலையைத் தணிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். இதன் விளைவாகவே மாணவர்கள் குழு மற்றுமொரு முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதாக அந்தப் பத்தியில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ.இ)

# யாழ்.மாநகர ஆணையாளர் தெரிவு அதிகாரத்துக்கு உட்பட்டே நடந்தது

*சபைச் சட்டத்தரணி குறிப்பிடுகின்றார்*

**யாழ்ப்பாணம், ஜன. 18**

**வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் நடத்தப்பட்ட புதிய முதல்வர் தெரிவுத் தேர்தல் அதிகாரத்துக்கு உட்பட்ட முறையில் நடைபெற்றுள்ளதாகக்கொள்ள இடமிருப்பதால் அவர் மீதோ உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் யாழ். மாநகர சபை ஆணையாளர், செயலாளர் மீதோ குற்றம் சுமத்துவதற்கு இடமிருக்காது என்று யாழ்.மாநகர சபை சிரேஷ்ட சட்டத்தரணி அ.இராஜரட்ணம் குறிப்பிட்டுள்ளார்.**

இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய முதல்வர் தெரிவு சம்பந்தமாக முன்னைய முதல்வர் மீண்டும் முதல்வர் தெரிவில் போட்டியிட்டமை தொடர்பிலும் யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய முதல்வர் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்டவாசி அல்லாதவர் என்ற அடிப்படையிலும் உள்ளூராட்சி சபைகள் தேர்தல்சட்ட விதிப்படி புதிய முதல்வர் மக்களால் தெரிவு செய்யப்படவில்லை என்ற அடிப்படையிலும் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாநகர சபையின் உறுப்பினர் ஒருவரால் மேற்குறித்த விடயங்கள் சர்ச்சையாகக் காட்டப்பட்டு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் குறித்த விடயம் தொடர்பாக அதிகாரம் இல்லாது செயல்பட்டார் என்றும் குற்றவழக்குத் தாக்கல் செய்யப்போவதாகவும் கூறப்படுகின்றது.

குறித்த குற்றச் சாட்டுகள் தொடர்பாக மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், உள்ளூராட்சி தேர்தல் சட்டம் ஆகியனவற்றில் இடம்பெறும் விதிகளை ஆராய்வதன் மூலம் குறித்த விடயம் தொடர்பில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அதிகாரத்துக்கு உட்பட்டு சட்டரீதியாக நடந்தாரா? இல்லையா என்பதை அறியமுடியும்.

உள்ளூராட்சி சபைகள் தேர்தல் சம்பந்தமாக தற்போது நடைமுறையிலுள்ள சட்டப்படி வட்டாரப் பிரதிநிதித்துவமும் விகிதாசார அடிப்படையில் கட்சிகளுக்குக் கிடைத்த வாக்கின் அடிப்படையிலும் ஒவ்வொரு கட்சியும், சுயேச்சைக்குழுவும் பெற்ற வாக்கு அடிப்படையிலும் அங்கத்தவர் எண்ணிக்கை கணிக்கப்பட்டு தேர்தல் ஆணையாளரால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் என வெளிப்படுத்தப்பட்ட வகையில் தற்போதைய முதல்வர் வி.மணிவண்ணன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் வதிவிடத்தைக் கொண்டிருக்கவில்லை என்ற தகைமையீனம் நீதிமன்றில் காலதாமதம் இல்லாது உட்படுத்தப்பட்டு தீர்ப்புப் பெற்றுக்கொள்ளவே தீர்ப்பு சட்டம் அமைகின்றது.

ஏற்கனவே மேன்முறையீட்டு நீதிமன்றில் குறித்த விடயம் தொடர்பான வழக்குத் தாக்கல்செய்த கட்சியால் அந்தவழக்கு கைவாங்கப்பட்ட நிலையில் வதிவிட தகைமையீனம் என்ற குற்றச்சாட்டு எழ இடமில்லை என்பதே அபிப்பிராயமாகும்.

தற்போதைய முதல்வரான மணிவண்ணன், அவர் அங்கம் வகிக்கும் கட்சி நீக்கியதாக தேர்தல் ஆணையாளருக்கு அவர் அங்கம் வகிக்கும் கட்சி அறிவித்திருந்தாலும் இவ்விடயம் தொடர்பில் தேர்தல் ஆணையாளரது தெளிவுறுத்தல் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு, யாழ் மாநகர சபை ஆணையாளருக்கும் அனுப்பியிருந்தால் மட்டுமே கட்சியிலிருந்து நீக்கப்பட்டவராக சட்டப்படி கருதப்படலாம். இந்த வகையிலும் எவ்வித தவறான அணுகுமுறையையும் உள்ளூராட்சி நிர்வாக அதிகாரிகள் புரிந்திருக்கவில்லை என்றே கருத இடமுண்டு.

முன்னைநாள் முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் குறித்த மாநகர சபைக் கட்டளைச் சட்டம் பிரிவு 14(1) இன்படி இரண்டாவது தடவையாக பாதீடு தோல்வி அடைந்தமையால் குறித்த 2012 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபை (விசேட சட்ட ஏற்பாடு) பிரிவு 7இன்படி தனது முதல்வர் பதவியிலிருந்து விலகினார் என்று கருதப்படுவதால் அவரது மாநகர சபை உறுப்பாண்மை இருந்து கொண்டிருப்பதால் மீள முதல்வர் பதவிக்குப் போட்டியிடுவதில் சட்டம் வெளிப்படையாக தடை எதையும் விதிக்காத வகையில் போட்டியிடுவதை உள்ளூராட்சி ஆணையாளரோ யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரோ தடைசெய்ய சட்டப்படி அதிகாரம் கொண்டிருக்கவில்லை என்றே அபிப்பிராயப்பட வேண்டும். குறிப்பாக பிரிவு 14(2) (B) முதல்வர் பதவி துறத்தல் பற்றி மட்டுமே கூறி அச்சந்தர்ப்பத்தில் மட்டுமே பதவியும் உறுப்புரிமையும் இழப்புப்படி கூறுவதால் போட்டியிட வாய்ப்பு இருந்துள்ளதென்றே கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (து)



## நீர்வேலி கதிர்காமத்தில் பட்டிப்பொங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 18

நூற்றாண்டு வரலாற்றைக் கொண்ட நீர்வேலி செல்லக் கதிர்காமம் கோவிலின் பட்டிப்பொங்கலும் பசுக்கள் .மற்றும் காளைகளைக் கௌரவிக்கும் நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை சிறப்புற நடைபெற்றன.

பிரம்மஸ்ரீ கு.தியாகராஜா குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்தப் பட்டிப்பொங்கலில், வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், வட்டார உறுப்பினர் இராசேந்திரம் செல்வராஜா, கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் கால்நடைகளை வளர்ப்போர் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

சைவத்துக்கும் தமிழுக்கும் பெயர் பெற்ற கிராமமான நீர்வேலியில் அமையப்பெற்றுள்ள நூற்றாண்டு வரலாற்றைக்கொண்ட செல்லக் கதிர்காமம் கோவிலில் வருடாந்தம் பட்டிப்பொங்கல் வெகு விமர்சையாக இடம்பெறுவது வழக்கமாகும். இந்தமுறை சுகாதார நியமங்களுக்கு மதிப்பளித்து, மட்டுப்படுத்தப்பட்ட ஏற்பாடு களுடன் பட்டிப்பொங்கல் வழிபாடுகள் நடைபெற்றன. (து)

கொரோனா தடுப்பு ஊசி

## இந்தியாவின் முயற்சிக்கு மஹிந்த பாராட்டு



கொழும்பு, ஜன. 18

இந்தியாவில் கொரோனா வைரஸ் தடுப்பு ஊசி போடும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. இது கொரோனாவின் முடிவின் ஆரம்பமாகக் கருதுகிறேன் என பிரதமர் மஹிந்த தெரிவித்துள்ளார்.

இந்தியா கொரோனா வைரஸ் தடுப்பு ஊசி போடும் நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளமை குறித்து இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு, இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ச ருவிற்றரில் பாராட்டுத் தெரிவித்துள்ளார். (ஒ.இ)

## ஆயிரம் ரூபா போராட்டத்தில் சிவில் அமைப்புகள் கைகோர்ப்பு

ஹற்றன், ஜன.18

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படைச் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கக் கோரி, தோட்டத் தொழிலாளர் சம்பள உரிமைக்கான இயக்கம் முன்னெடுத்து வரும் தொடர் போராட்டத்துக்கு மலையகத்தில் உள்ள பல்வேறு சிவில் அமைப்புகளும் கலந்து கொண்டு ஆதரவு வழங்கியுள்ளன.

ஹற்றன் மல்லியப்புச் சந்தியில் நேற்று நடைபெற்ற இந்தப் போராட்டத்தை மலையக சிவில் அமைப்புகளின் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கறுப்புப் பட்டி அணிந்து பதாகைகளை ஏந்தி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அரசாங்கம் உறுதியளித்தபடி தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை நாள் சம்பளத்தை 1000 ரூபாவாக பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் இதை இழுத்தடிப்பு செய்ய இடமளிக்க கூடாது என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (வ-இ)



## சாணக்கியன் எம்.பிக்கு கொரோனா 'நெகடிவ்'

மட்டக்களப்பு, ஜன.18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனுக்கு கொரோனாத் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹக்கீமுக்கு அண்மையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, சுமந்திரன் மற்றும் சாணக்கியன் உள்ளிட்ட 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த சாணக்கியனுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் அவருக்குத் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் பின் கருத்துத் தெரிவித்துள்ள சாணக்கியன், மட்டக்களப்பின் நிலைமை தற்போது மோசமடைந்து கொண்டு வருகின்றது.

வயது கூடியவர்கள், சிறு பிள்ளைகள், கர்ப்பிணிகள் மற்றும் நீண்ட காலம் நோய் வாய்ப்பட்டு இருப்பவர்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன் என்று தெரிவித்துள்ளார். (வ-இ)

# ஐ.நா. மீதுள்ள எதிர்பார்ப்பு!



பீ.ஏ.அந்தோனி மார்க்



எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பொதுக்கூட்டம் இலங்கைத் தமிழர்களுக்கு முக்கியத்துவம் மிக்கதொன்றாகப் பார்க்கப்படுகின்றது. 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியிருந்தது. உண்மையைக் கண்டறிதல், இழப்பீடு வழங்கல், குற்றமிழைத்தோருக்குத் தண்டனை வழங்குதல், இவ்வாறான மனித உரிமை மீறல்கள் இனிமேல் நடைபெறாது பாதுகாத்தல் என்பன இந்த இணை அனுசரணை மூலம் இலங்கை அரசின் மீது வைக்கப்பட்ட முக்கிய பொறுப்புக்களாக அமைந்தன.

இதற்கு முன்பு பல தடவைகள் இலங்கை அரசு சர்வதேசத்துக்கும் ஐ.நா சபைக்கும் இந்தியாவுக்கும் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி அது தொடர்பான நடைமுறைகளைப் பின்பற்றி வந்தது. ஆனால் தற்போது ஆட்சிப்பீடம் ஏறியுள்ள புதிய அரசு முன்னைய அரசு கைக்கொண்ட நடவடிக்கைகளில் இருந்து முரணான பாதையில் பயணிக்கத் தலைப்பட்டுள்ளது. இந்தப் பயணத்தின் உச்சக்கட்டமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட 30/1 தீர்மானத்தில் இருந்து இலங்கை வெளியேறியுள்ளது.

ஐ.நா சபையின் தீர்மானம் இலங்கை அரசைக் கட்டுப்படுத்தாது. ஆனால் இலங்கை அரசு மீது அழுத்தத்தை வழங்குவதற்கு உதவும். ஆனால் தமிழ் மக்களுக்கு நீதி கிட்டும் வகையிலான பொறுப்புக்கூறல் வேண்டுமெனின் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணை ஊடாக மட்டுமே சாத்தியமாகும்.

இலங்கைக்கு வழங்கும் அவகாசத்தை நீக்கி இலங்கையில் நடைபெற்ற இன அழிப்பு, போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான முழுமையான சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை ஒன்றை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினூடாக அல்லது சர்வதேச குற்றவியல் விசேட தீர்பாயம் ஒன்றினூடாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மிகவும் அவசியமானது. இதற்கு ஐ.நா சபை ஆணையாளர் நாயகம் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள பேரவைக் கூட்டத்தில் மேற்படி தீர்மானத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

ஏற்கனவே இரு தடைவைகள் இரு ஆண்டுகள் என்ற கோதாவில் 4 ஆண்டுகள் கால அவகாசம் வழங்கியுள்ள நிலையில், இந்த அவகாசங்கள் மேலும் பரவலாக்கப்படுதல் தகாது. போரின்போதும் அதன் பின்னர் தற்போது வரையிலான காலப்பகுதி வரையிலும் தமிழ் மக்கள் அன்றாடம் அனுபவித்துவரும் பெருந்துன்பங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் பறைசாற்றப்படுதல் வேண்டும். இதை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் இங்குள்ள தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் புலம்பெயர் அமைப்புக்களும் செயற்படுதல் வேண்டும்.

தற்போது ஐ.நா மனித உரிமைகள் சபையில் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுள்ள சுமார் 45க்கும் மேற்பட்ட நாடுகள் இலங்கைத் தமிழர்களின் தீராப் பிரச்சினை மட்டில் கூடுதல் கரிசனை காட்டவேண்டும். மனித உரிமைகளைப் பேணும் நாடுகள் ஓரணியில் நின்று ஈழத்தமிழர்களுக்காக உரத்துக் குரல்கொடுக்க வேண்டும். அதுவே ஈழத் தமிழர்களின் எதிர்பார்ப்புமாகும்.

**ஐ.நா சபையின் தீர்மானம் இலங்கை அரசைக் கட்டுப்படுத் தாது. ஆனால் இலங்கை அரசு மீது அழுத்தத்தை வழங்குவதற்கு உதவும். ஆனால் பொறுப்புக்கூறல் தமிழ் மக்களுக்கு நீதி கிட்டும் வகையிலான பொறுப்புக்கூறல் வேண்டுமெனின் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணை ஊடாக மட்டுமே சாத்தியமாகும்.**

---

# ஏகபாதாசனம்

வாரம் ஓர் ஆசனம்

8



**செய்(படி)முறைகள்:**

1. நேராக நிமிர்ந்தவாறு நிற்கவும் (தடாசனம்)
2. இடது காலைத் தூக்கி குதிக்கால் குதத்துடன் பொருந்தியவாறு, இடப்பாதமானது வலக் கால் தொடையுடன் அழுத்தியவாறு வைக்கவும். விரல்கள் கீழ் நோக்கியவாறிருத்தல் வேண்டும்.
3. இரு கைகளையும் கூப்பியவாறு நெஞ்சுடன் பொருத்திவைத்து பின்னர் மூச்சை உள்ளிழுத்தவாறு கைகளைத் தூக்கி தலைக்கு நேராக உயர்த்தல் வேண்டும். புஜங்கள் இரண்டும் காதுகளுடன் சேர்ந்திருக்க வேண்டும். இதன் உச்சநிலையில் 3 நிமிடங்கள் வரை நின்று சுவாசிக்கலாம்.
4. மூச்சை வெளிவிட்டவாறு இரு கைகளையும் கூப்பியவாறு நெஞ்சுக்கு அருகாக கொண்டு வரவும்.
5. கை, கால்களைக் கீழிறக்கித் தளர்த்திவிட்டு ஆரம்ப நிலைக்கு வரவும்.

**குறிப்பு :**

இதேபோல் மாற்றுப் பயிற்சியாக மறுபுறமாகவும் (இடக்கால்) செய்தல் வேண்டும். ஒவ்வொரு பக்கமும் தலா ஒரு தடவை செய்தால் போதுமானது. உடல் உபாதைகள் உள்ளவர்கள் தகுந்த குருவின் ஆலோசனையுடனேயே செய்தல் வேண்டும். மேலதிக விளக்கங்கள் தேவைப்பட்டால் அடியேனது 0771041455 என்ற அலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**பயன்கள்:**


முதுகுத் தண்டு வடம், கால்கள் வலிமை பெறும், உடல் சமநிலையைப் பேணுவதுடன் கண், காது சம்பந்தமான பிரச்சினைகள் நீங்கும். கால் தசைகள், நரம்புகள், இடுப்பு, கணுக்கால் முழங்கால் மூட்டுக்கள் தோள்கள் பலமடைகின்றன. தலைப்பகுதிக்கு அதிகளவு குருதி செல்வதால் தலைசுற்று, மயக்கம், தலைவலிகள், வலிப்புகள் நீங்கி மூளை சுறுசுறுப்படையும். ஞாபக சக்தி கூடுவதுடன் இதய, சுவாச நோய்கள் குணமாகும்.

தொடரும்...

ஸ்ரீ. நதிபரன் (யோகா போதனாசிரியர்)

# தொற்றிலிருந்து மீட்சி இந்த ஆண்டும் இல்லை

## ரணில் கவலை



**கொழும்பு, ஜன.18**
**கொரோனாத் தொற்று இந்த ஆண்டுக்குள் முடிவுக்கு வரும் என்று நினைக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

சில நாடுகள் ஏற்கனவே தடுப்பூசி திட்டங்களை ஆரம்பித்துள்ளன, ஆனால் இலங்கைக்கு இதுவரை அத்தகைய திட்டம் எதுவும் இல்லை. மார்ச் மாதத்தில் தடுப்பூசி பெறுவோம் என்று அரசாங்கம் முன்பு கூறியது.
சார்க் நாடுகளுக்கு 20 மில்லியன் தடுப்பூசிகள் மட்டுமே வழங்கப்படும் என இந்தியா தெரிவித்துள்ளது. அது போதாது. தடுப்பூசிகளை வாங்க ஏற்றுமதி வர்த்தகர்களிடமிருந்து 10 மில்லியன் அமெரிக்க டொலரை அரசு கோரியுள்ளது. அவர்களிடம் பணம் கோராமல் பாதீட்டில் அதற்கான நிதியை அரசு ஒதுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)



எஸ்.ஓ.எஸ் சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் மற்றும் இல்லத்தின் தேசிய இயக்கு நரும் கலந்துகொண்டனர். (ரி5-26)



மன்னார் றோட்டரிக் கழகத்தினர், பண்டிவிரிச்சான் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 40 குடும்பங்களுக்கு தைப்பொங்கல் தினமன்று நுளம்பு வலைகள் வழங்கினர். தேக்கம் கிராமத்திலுள்ள 18 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை பை, கொப்பிகள், சப்பாத்து என்பனவும் 50 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகளும் வழங்கப்பட்டன. (த-213)

## தவிசாளர்களின் அதிகாரங்கள் உப தலைவர்களிடம் கையளிப்பு

### கிழக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை

திருகோணமலை, ஜன.18
கிழக்கு மாகாணத்தில் தலைவர்களின் அதிகாரங்களை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் கடமைகளை முன்னெடுப்பதற்கான அதிகாரங்கள் அந்தந்த சபைகளின் உப தலைவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.
இதற்கான அதிவிசேட வர்த்தமானி கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தால் வெளியிடப்பட்டுள்ளது.
இதற்கமைய, பதியத்தலாவை பிரதேச சபை, இறக்காமம் பிரதேச சபை, ஏறாவூர் பிரதேச சபை, மண்முனை பிரதேச சபை, அம்பாறை நகர சபை என்பவற்றுக்குரிய அதிகாரங்கள் அந்தந்த சபைகளின் உப தலைவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (வ-இ)

## வயல்களில் விசஜந்துக்களை வேட்டையாடும் மயில்கள்!

### விவசாயிகள் மகிழ்ச்சி

அம்பாறை, ஜன.18
அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக வேளாண்மைச் செய்கை அறுவடையானது, அடை மழைக்கு மத்தியில் ஆரம்பித்துள்ள நிலையில் மயில்களின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது.
விதைப்புக் காலங்களில் விசஜந்துக்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டபோதிலும், தற்போது விளைச்சல் நிலையிலுள்ள இப்பகுதிக்கு எண்ணிக்கையற்ற மயில்கள் பிரவேசித்து விச ஜந்துக்களை வேட்டையாடி வருகின்றன எனவும் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.
இதனால், மயில் கூட்டங்களின் வருகையால் அம்பாறை மாவட்டத்தின் பெரிய நீலாவணை, ஒலுவில், அட்டாளைச்சேனை, மத்தியமுகாம், நாவிதன்வெளி, சவளக்கடை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று ஆகிய பகுதிகளில் விச ஜந்துக்கள் குறைவடைந்துள்ளன எனவும் தெரிவித்தனர். (ற-இ)



கிளிநொச்சி கோணாவில் பகுதியில் மின் ஒட்டுத் தொழில் (வெல்டிங்) செய்துவரும் மாற்றுவலுவுடைய குடும்பஸ்தர் ஒருவருக்கு கிளிநொச்சி லயன்ஸ் கழகத்தினால் தைப்பொங்கல் தினத்தன்று மின்ஒட்டு செய்வதற்குரிய ஒருதொகை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (த-ரி1)

## ஆயிரம் ரூபா விவகாரம்; 2 மணிநேரம் உரையாடல்

கொழும்பு, ஜன.18
தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள விவகாரம் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று தொழில் அமைச்சில் நேற்று முன்தினம் 2 மணித்தியாலங்கள் இடம்பெற்றுள்ளது.
தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் வடிவேல் சுரேஸ் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.
இதன்போது, சம்பள உயர்வுக்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் ஒத்துழைக்கவில்லை எனவும் முதலாளிமார் சம்மேளனத்தின் கலந்துரையாடலில் திருப்தி இல்லை எனவும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.
மேலும், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த சம்பளமாக 1105 ரூபாவை பெறுவதற்கான இறுதி முன்மொழிவை இலங்கை பெருந்தோட்ட நிறுவன சம்மேளனம் சமர்ப்பித்துள்ளது. (வ-இ)

## 150 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

சாவகச்சேரி, ஜன. 18
தென்மராட்சி பிரதேசத்தில் தாய், தந்தை மற்றும் பெற்றோரை இழந்த மற்றும் பொருண்மியத்தில் பின்தங்கிய குடும்பங்களைச்சேர்ந்த 150 மாணவர்களுக்கு வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கப்பட்டன.
தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ப-9)

## மருத்துவ அதிகாரிகள் சங்க தலைவருக்கு தொற்றில்லை

கொழும்பு, ஜன. 18
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவர் அனுருத்த பாதெனியவுக்கு கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டது. அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்று இல்லை என உறுதியாகியுள்ளது.
விருந்து ஒன்றில் கலந்துகொண்ட மருத்துவர் ஒருவருக்கு கொரோனாத் தொற்றுறுதியானதை அடுத்து, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி5)

# பாடசாலைக் கல்வி முறையில் மாற்றம்

பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை தரம் 12 வரை குறைப்பது தொடர்பில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகளுக்கான காத்திருப்பைக் கருத்திற்கொண்டே இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன்படி, சாதாரண தரப் பரீட்சையை தரம் 10 இலும், உயர் தரப் பரீட்சையை தரம் 12இலும் நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என கல்வி அமைச்சின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, இப் பரீட்சைகளின் பெறுபேறுகள் யாவும் ஒரு மாத காலத்தில் வெளியிடவும் திட்டமிடப்பட்டு வருகின்றது. (வ-இ)

# காலியின் மாயாஜால ஆடுகளத்தில் இங்கிலாந்தை சுருட்டுமா இலங்கை?

**காலி, ஜனவரி. 18**

**இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இன்னும் 36 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இங்கிலாந்து அணி உள்ளது. காலி ஆடுகளத்தில் டெஸ்ட் ஆட்டத்தின் இறுதி நாளில் பந்து தாறுமாறாகத் திரும்பும். இதனால் என்னவும் நடக்கலாம் என்ற எண்ணப்பாடும் ஏற்பட்டுள்ளது.**



கடந்த 14ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி 135 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக சந்திமல் 28 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பெஸ் 5 இலக்குகளைக் கைப்பற்றினார். பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி 421 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. அணித் தலைவர் ரூட் 228 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் டில்ருவான் பெரேரா 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

286 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இருந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி நேற்று முன்தின மூன்றாம் நாள் முடிவில் இரு இலக்குகளை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. திரிமன்னே 76 ஓட்டங்களுடனும் எம்புல்தெனிய ஓட்டமெதையும் பெறாமலும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். ஓட்டக்கணக்கை ஆரம்பிக்காமல் வீழ்ந்தார் எம்புல்டெனிய. மறுமுனையில் சதம் கடந்தார் திரிமன்னே. சுமார் 8 ஆண்டுகளின் பின்னர் இந்தச் சதத்தை அவர் பதிவுசெய்தார். இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கான போராட்டத்தில் மத்தியூஸ் ஒரு முனையில் நிலைத்துநிற்க மறுமுனையில் சந்திமல் 20 ஓட்டங்களுடனும் டிக்வெல்ல 29 ஓட்டங்களுடனும் பவிலியன் திரும்பினர். டசுன் சானக, ஹசரன்க ஒற்றையிலக்கத்தைத் தாண்டவில்லை. இறுதிக்கட்ட நம்பிக்கையை வழங்கினார் டில்ருவான் பெரேரா. அவர் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அரைச்சதம் கடந்த மத்தியூஸும் 71 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 359 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் லீச் 5 இலக்குகளையும், பெஸ் 3 இலக்குகளையும், கரன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமை கைகொடுக்க இங்கிலாந்து அணிக்கு இலக்காக 74 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. ஆரம்ப வீரரான சிப்லி வெறும் இரண்டே ஓட்டங்களுடன் எம்புல்டெனியவிடம் போல்ட் ஆனார். கிரௌலியை 8 ஓட்டங்களுடன் பவிலியனுக்கு அனுப்பினார் எம்புல்டெனிய. ரூட் ஓர் ஓட்டத்துடன் ரண்அவுட் ஆனார். இதையடுத்து 14 ஓட்டங்களுக்கு மூன்று இலக்குகளை இழந்தது இங்கிலாந்து அணி. பெரும் நெருக்கடிக்குள் இங்கிலாந்து தள்ளப்பட்டது. லோரன்ஸ் மற்றும் பேர்ஸ்ரவ் ஒருவாறு தாக்குப்பிடித்து விளையாடினார்கள். நாள் முடிவில் இங்கிலாந்து அணி 3 இலக்குகளை இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பேர்ஸ்ரவ் 11 ஓட்டங்களுடனும் லோரன்ஸ் 7 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

## பரபரப்பான நிலையில் பிரிஸ்பெய்ன் டெஸ்ட்

# துவண்டுபோன இந்திய அணியை தூக்கி நிறுத்திய தாக்கூர், சுந்தர்





பிரிஸ்பெய்ன், ஜன. 18

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் பிரிஸ்பெய்னில் இடம்பெற்றுவரும் நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் இரு அணிகளும் சமனான பலத்துடன் உள்ளன. பரபரப்பான நிலையை பிரிஸ்பெய்ன் டெஸ்ட் எட்டியுள்ளது.

கடந்த 15ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 369 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக லபுஸ்சேன் 108 ஓட்டங்களையும், பெய்ன் 50 ஓட்டங்களையும், கிறீன் 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நடராஜன், சுந்தர், தாக்கூர் மூவரும் தலா மூன்று இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி நேற்று முன்தின இரண்டாவது நாள் முடிவில் இரு இலக்குகளை இழந்து 62 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்தது.

புஜாரா 8 ஓட்டங்களுடனும் ரகானே 2 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினார்கள். சொல்லிக்கொள்ளும் படியான ஆட்டத்தை இருவரும் வெளிப்படுத்தினார்கள். 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் புஜாரா. 37 ஓட்டங்களுடன் ரகானேயை வீழ்த்தினார் ஸ்ராக். மத்திய வரிசை வீரராகக் களமிறக்கப்பட்ட அகர்வால் 38 ஓட்டங்களைச் சேர்த்தார். ரிஷப் பன்ட் அதிரடியாக விளையாடி 23 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார். ஒரு கட்டத்தில் இந்திய அணி 186 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்து தவித்தது.

ஆஸ்திரேலியாவின் ஆதிக்கம் மிகைப்படுகின்றது என்ற நிலையில் ஆரம்பித்தது அந்த இணைப்பாட்டம். சுந்தர், சர்துல் தாக்கூர் இருவரும் இணைந்து ஆஸ்திரேலியாவின் வேகப்பந்துவீச்சுக் கூட்டணியை மிரட்டியெடுத்தனர். சுந்தருக்கு இதுதான் அறிமுக ஆட்டம். சர்துல் தாக்கூருக்கு இரண்டாவது டெஸ்ட் ஆட்டம். மிக நேர்த்தியான முறையில் இருவரும் இன்னிங்ஸைக் கட்டமைத்தனர். அதிரடி நிதானம் என மாறிமாறி கலந்து வழங்கினர். இணைப்பாட்டம் 100 ஓட்டங்களைக் கடந்தது. இருவரும் அரைச்சதமும் பெற்றனர். இந்திய அணி 309 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 67 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் தாக்கூர். அடுத்த சில நிமிடங்களில் 62 ஓட்டங்களுடன் சுந்தரும் ஆட்டமிழக்க இந்திய அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 336 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ஹேசில்வூட் 5 இலக்குகளையும், ஸ்ராக், கம்மின்ஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

33 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸுக்காக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி நாள் முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 21 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. வோர்ணர் 20 ஓட்டங்களுடனும் ஹரிஸ் ஓர் ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். (ம)

# பிரிஸ்பெய்னில் இன்று மழை!

பிரிஸ்பெய்ன், ஜன. 18

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தின் நான்காவது நாள் மழை காரணமாகப் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

பிரிஸ்பெய்ன் வளிமண்டலவியல் திணைக்களத்தின் கருத்தின்படி பிரிஸ்பெய்னில் இன்று மழை மற்றும் இடியுடனான காலநிலை இருக்கும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. எனினும் எந்த நேரத்திலும் மாற்றங்கள் நிகழலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)



## இன்றைய நாள்

**மேடம்:** இதுநாள் வரை இருந்து வந்த சிறுசிறு பிரச்சினைகள் சரியாகும். குடும்பத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து நன்மை காண்பர். இடையூறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

**இடபம்:** மனச் சஞ்சலம் ஏற்படலாம். உறவினரின் ஆதரவு கிடைக்கும். எதையும் உன்னிப்பாய் கவனித்து மனதில் வாங்கி வெல்வீர்கள். பதவிகள் தேடி வரும்.

**மிதுனம்:** பெரியவர்களின் ஆலோசனை தக்க சமயத்தில் கைகொடுக்கும். குடும்ப வாழ்வில் சிறு சிறு சலசலப்புகள் ஏற்படக் கூடும். முயற்சியால் ஆதாயங்கள் சாத்தியமாகும்.

**கடகம்:** உடல்நலத்தில் பிரச்சினை உள்ளவர்கள் கவனமாக இருங்கள். பொருளாதார ரீதியாக தடைகள் வந்து நீங்கும். பேச்சில் சறுக்கலாம். அவசியமற்ற பேச்சுகள் வேண்டாம்.

**சிம்மம்:** பயம் நீங்கும். புதிய நபர்களின் செய்கைகள் வியப்பளிக்கும். நீங்கள் சந்திக்கும் பிரச்சினைகளைப் பொறுமையாக கையாளுங்கள். பக்தி உணர்வும் மனதில் அதிகரிக்கும்.

**கன்னி:** அநாவசியமாக யாருக்கும் எந்த உறுதிமொழியும் தர வேண்டாம். ஒரே சமயம் நான்கைந்து வேலைகள் பார்க்க வேண்டி வரும்.

**துலாம்:** திறமையையும், உழைப்பையும் பயன்படுத்தி வெல்வீர்கள். பல நாள் தீராத பிரச்னைகளுக்கு நல்ல தீர்வு காண்பீர்கள். அலுவலகத்தில் ஓரளவு நன்மைகளை எதிர்பார்க்கலாம்

**விருச்சிகம்** மேலதிகாரிகளுடன் பேசும்போது அலட்சியம் வேண்டாம். நீங்கள் எதிர்பார்க்காத விஷயங்கள் ஒவ்வொன்றாக நடக்கும். பெரியோர் சொல்வதை கவனிக்கவும்.

**தனுசு** சில பணிகளை நீங்களே நேரடியாகச் சென்று முடிப்பது நல்லது. நிறுத்தி வைத்திருந்த முக்கிய பணிகளை செய்யத் தொடங்குவீர்கள். திறமையாகச் செயல்படுவீர்கள்.

**மகரம்** அமைதி கூடும். தாயாருடன் இருந்த மனவருத்தம் நீங்கும். வீடு கட்ட வங்கிக் கடன் கிடைக்கும். புதிய விஷயம் புரியும். திடீர்ப் பயணங்களால் திணறுவீர்கள். ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** முக்கியஸ்தர் ஒருவரின் அறிமுகத்தால் ஆதாயம் உண்டு. சக ஊழியர்களால் ஏற்பட்ட தடை விலகி, அங்கீகாரம் கிடைக்கும். சிரமத்திலிருந்து விடுபட உங்களின் தன்னம்பிக்கை உதவும்.

**மீனம்:** திறமை அதிகரிக்கும். பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். வேலைகளைத் தள்ளிப்போடாமல் முடித்து நிம்மதி காண்பீர்கள். சேமிப்பு கூடும்.

# ஐ.தே.கவின் புதிய குழு விரைவில் பதவியேற்பு!

கொழும்பு. ஜன.18

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளுக்கு அண்மையில் நியமிக்கப்பட்ட நிர்வாகக் குழு எதிர்வரும் வியாழக்கிழமை தங்களது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளது.

அன்றுமுதல் கட்சியை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை மேலும் விரிவுபடுத்தவுள்ளோம் என கட்சியின் புதிய செயலாளர் பாலித ரங்கே பண்டார ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் முக்கிய பதவி நிலைகளுக்கான நியமனங்களை மேற்கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கடந்த 13 ஆம் திகதி கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் கூடியது. இதன்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசமும், கட்சியின் தவிசாளராக முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தனவும், கட்சியின் பொதுச் செயலாளராக பாலித ரங்கே பண்டாரவும், கட்சியின் பொருளாளராக ஏ.எஸ்.எம். மிஸ்பாவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ற-இ)



தமிழீழ விடுதலைப் புலிகளின் கேணல் கிட்டு உட்பட 10 வீரவேங்கைகளின் 28ஆவது ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு ஜேர்மனி எசன் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் அதன் விதிமுறைகளுக்கு ஏற்றால்போல் உணர்வாளர்களால் இது நடத்தப்பட்டது. மாவீரர்களுக்கு தீபம் ஏற்றி மலர் தூவி வீரமணக்கம் செலுத்தப்பட்டது. (து)

# கால்நடை வளர்ப்போர் பொங்கல் பானைப் போர்



மட்டக்களப்பு. ஜன.18

மட்டக்களப்பு, சித்தாண்டிப் பகுதியில் கால்நடை வளர்ப்போரால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. வீதிகளில் பொங்கல் பானைகளை வைத்து அவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது பேசுபொருளாக இருக்கும் மயிலத்தமடு, மாதவனைப் பகுதியில் கால்நடை வளர்ப்போர் நீண்டகாலமாக எதிர்நோக்கும் பிரச்சினையை தீர்த்துவைக்குமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வாழைச்சேனை மட்டக்களப்பு பிரதான வீதியை மறித்தும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், தாங்கள் தமது கால்நடைகள் வளர்க்கமுடியாத வகையில், தங்களது நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன எனவும், கால்நடைகள் கொல்லப்படும் சம்பவங்களும் தற்போது இடம்பெறுகின்றன எனவும் தெரிவித்தனர். ஒன்றிணைந்த பண்ணையாளர்கள் இதன்போது தமது நிலம் தமக்கு வேண்டும் எனப் பல கோஷங்களுடன் கண்டனப் போராட்டத்தை முன்னெடுத்தனர். (ற-இ)

# இலங்கைத் தொழிலாளருக்கு அனுமதி அளித்தது குவைத்

குவைத் சிட்டி, ஜன.18

தொழிலாளர் ஏற்றுமதி நாடுகளான இலங்கை, பிலிப்பைன்ஸ், இந்தியா மற்றும் ஏனைய இடங்களில் இருந்து புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உள்நாட்டு உதவியாளர்கள் நாட்டுக்குள் பிரவேசிக்க குவைத் அரசு நேற்று தொடக்கம் அனுமதி அளித்துள்ளது.

இது தொடர்பில் குவைத் டைம்ஸ் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, குவைத்துக்கு வரும் வீட்டுத் தொழிலாளர்கள் அங்கு அங்கீகாரம் பெற்ற ஆய்வகத்தின் கொரோனாப் பரிசோதனை அறிக்கையை வைத்திருக்க வேண்டும். அவர்களுக்கு குவைத்தில் மீண்டும் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்படும். அதன் முடிவு எதிர்மறையாக இருந்தால், அவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள்.


தனிமைப்படுத்தலின் முடிவில் அவர்களுக்கு மூன்றாவது பி.சி.ஆர் சோதனை மேற்கொள்ளப்படும். முடிவுகள் எதிர்மறையாக இருந்தால் அவர்களின் ஆதரவாளர்களின் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். நேர்மறையான முடிவுகளைப் பெறுபவர்களை மீண்டும் தனிமைப்படுத்த சுகாதார அமைச்சு பொறுப்பேற்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# கொரோனாத் தொற்று: வரைபடம் வெளியீடு

கொழும்பு. ஜன. 18

இலங்கையில் அதிக ஆபத்துள்ள கொரோனாத் தொற்றுப் பிரதேசங்கள் குறித்து தகவல்களை வரைபடம் மூலம் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு வெளியிட்டது.

சுகாதாரசேவைகள் திணைக்கள மருத்துவ அதிகாரிகளின் வகைப்படுத்தல், பதிவான தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட மையங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது என தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்தது. (ரி5)



# சுய தனிமையிலுள்ளவர்கள் விசேட கண்காணிப்பின் கீழ்!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.18**

**சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் சுகாதாரப் பிரிவினர் வழங்கியுள்ள ஆலோசனைகளை முறையாகப் பின்பற்றுகின்றனரா? என்பது தொடர்பில் கவனம் செலுத்துவதற்காக அவர்களது வீடுகளுக்கு அருகில் சிவில் உடையில் பொலிஸாரை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.**

சுய தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் இரவு நேரங்களில் வெளியில் செல்கின்றனர் என கிடைக்க பெற்ற தகவலை அடுத்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். இதனால் சிவில் உடையில் பொலிஸாரை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது சுகாதார நடவடிக்கைகளை மீறுபவர்களை கைது செய்து வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் ஒரு லட்சத்து 16 ஆயிரம் பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் அவர்களில் அதிகமானவர்கள் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர் என, அவர் மேலும் தெரிவித்துள்ளார் (ற-இ)

# புதிய கல்வி முறையில் திறன்களுக்கு முன்னுரிமை

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.18

திறன்கள் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்கக்கூடிய கல்வி முறை அறிமுகப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். 16 ஆவது பெனடிக்ட் கத்தோலிக்க உயர்கல்விநிறுவனத்தில் நடைபெற்ற பட்டப்படிப்புகளை பதிவுசெய்வதற்கான ஆரம்ப விழாவில் கடந்த வெள்ளிக்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விரைவான அபிவிருத்திக்காகவும், குறுகிய காலத்தில் எதிர்பார்க்கப்படும் பொருளாதார இலக்குகளை அடையவும் தேசிய கல்வி கொள்கை ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக கல்வியின் தரத்தை சிறந்த தரத்துக்கு உயர்த்துவதற்கு அதிக முன்னுரிமை அளிப்பதே எனது நோக்கம் எனத் தெரிவித்த ஜனாதிபதி, பல்கலைக்கழகங்களை "ஸ்மார்ட் பல்கலைக்கழகங்களாக" மாற்றுவதன் அவசியத்தையும், தொழில்நுட்ப அறிவு நிறைந்த எதிர்கால தலைமுறையை உருவாக்குவதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார். (வ-இ)



# முல்லை. சூசையப்பர் ஆலயம் மறைமாவட்ட ஆயரால் திறப்பு

முல்லைத்தீவு, ஜன.18

முல்லைத்தீவு கூழாமுறிப்பு பங்கின் முத்தையன்கட்டு பிரதேசத்தில் அமைக்கப்பட்ட புனித சூசையப்பர் ஆலயம் கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசத்தால் திறந்துவைக்கப்பட்டது.

அருட்திரு நிருபன் பங்குத்தந்தையாக பணிபுரிந்த காலத்தில் அடிக்கல் நடப்பட்ட இந்த ஆலயம் அருட்திரு நிக்சன் கொலின்ஸ் பணிக்காலத்தில் முழுமை பெற்று திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-222)

# சுற்றுலாவிகளின் வருகை வெற்றி

கொழும்பு, ஜன.18

இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்து வரும் வேலைத் திட்டம் வெற்றி அளித்துள்ளது எனத் தெரியவருகிறது. கடந்த மூன்று வார காலப்பகுதியில் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் ஆயிரத்து 500 க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் மூலம் 22 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான அமெரிக்க டொலர் வருமானம் இலங்கைக்கு கிடைத்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை வரையில் 9 விமானங்களில் ஆயிரத்து 500க்கும் அதிகமான உக்ரைன் சுற்றுலா பயணிகள் இலங்கை வந்துள்ளனர். அவர்களில் ஒரு பகுதியினர் சுற்றுலாவை முடித்துக் கொண்டு திரும்பிச் சென்றுள்ளனர். அவர்கள் குறைந்தபட்சம் 10 நாள்கள் நாட்டில் தங்கியிருந்துள்ளதுடன், விடுதி அறைக்காக நாள் ஒன்றுக்கு 125 தொடக்கம் 150 டொலர் செலவிட்டுள்ளனர். அதற்கு மேலதிகமாக வேறு இடங்களுக்குச் சென்று பொருள்கள் கொள்வனவு செய்யும்போது 100 டொலருக்கு மேலதிகமாக ஒரே தடவையில் செலவிட்டுள்ளனர். அதற்கமைய அந்த சுற்றுலாப் பயணிகள் மூலம் இலங்கைக்கு கிடைத்த வருமானம் 42 கோடி ரூபாவை விடவும் அதிகம் என தெரியவருகின்றது. (வ-இ)

# பொலிஸார் 20 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜன.18

ரத்தொழுகம, கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் பணிபுரியும் 20 பொலிஸாருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் அப்பிரதேசங்களைச் சேர்ந்த 7 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ரத்தொழுகம பொலிஸில் 15 பொலிஸாருக்கும், கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் கடமையாற்றிய 5 பொலிஸாருக்குமே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# தனிமைப்படுத்தப்பட்ட சில பகுதிகள் 'ரிலீஸ்'

கொழும்பு, ஜன.18

தனிமைப்படுத்தலில் இருந்த சில பகுதிகள் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படுகின்றன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதன்படி களுத்துறை - இந்துவர பகுதியின் துன்தூவ கிழக்கு மற்றும் மேற்கு கிராம சேவகர் பிரிவுகள் உடன் நீக்கப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# கால்நடைகளில் புதிய வைரஸ் நிபுணர்களின் அறிக்கை நாளை

கொழும்பு, ஜன.18

கால்நடைகளுக்கு பரவுகின்ற வைரஸ் நோய் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை நாளை இராஜாங்க அமைச்சர் டீ.பி. ஹேரத்திடம் கையளிக்கப்படவுள்ளது. இந்த விடயம் தொடர்பில் ஆராய கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவால் நோய்ப் பரவல், அதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் நோய்ப் பரவலைக் கட்டுபடுத்த மாகாண ரீதியாக விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய அறிவுறுத்தல்கள் உள்ளிட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்படவுள்ளன. கால்நடைகளுக்குப் பரவும் கெப்ரி பொக்ஸ் எனப்படும் வைரஸ் வகையைச் சேர்ந்த ஒருவித நோயால் பால் உற்பத்தியாளர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)



யாழ் மாநகர சபை முதல்வர் மணிவண்ணனால் "தூய கரம் தூய நகரம்" என்ற தொனிப்பொருளில் யாழ் நகரத்தை தூய்மைப்படுத்தும் செயற்பாடு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த வேலைத்திட்டத்தில் யாழ் மாநகரசபை ஆணையாளர், யாழ் மாநகர சபை சுகாதார ஊழியர்கள், சமூக ஆர்வலர்கள், வர்த்தகர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி5-20)

# இலங்கையருக்கு சவூதியில் வேலை

கொழும்பு, ஜன.18

தாதி மற்றும் வீடு பராமரிப்பு துறை வேலைவாய்ப்புக்கு இலங்கை பணிப் பெண்களை இணைத்துக்கொள்ள சவூதி அரேபியாவில் உள்ள முன்னணி நிறுவனம் முன்வந்துள்ளது. இலங்கைப் பெண்கள் ஏற்கனவே உள்நாட்டு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிகின்றனர் எனவும் அவர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் கிடைக்காமையால், அவர்களுக்கு கூடிய சம்பளத்தைப் பெறமுடியாதுள்ளது எனவும் குறித்த அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே சவூதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் இலங்கையில் என்.வி.கியூ (NVQ) பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கும் அதன் பின்னர் அவர்களை வேலைவாய்ப்புக்கு அனுப்புவதற்கும் தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி5)

முதலாம் பக்கத் தொடர்ச்சி....

வேகமாக....

வவுனியா, பட்டாணிச்சூரில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து, வவுனியா நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் பணியாற்றுபவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டது.

அதன் ஒரு தொகுதி முடிவுகள் நேற்று வெளியான நிலையில், 24 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வெளிக்குளம், தெற்கிலுப்பைக்குளம்,மகாறம்பைக்குளம், பட்டாணிசூர் வேப்பங்குளம், பட்டக்காடு கந்தசுவாமி கோவில் வீதி, வெளிக்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். இவர்களுடன் சேர்த்து வவுனியா நகரக் கொரோனா கொத்தணியால் கடந்த ஒருவாரத்தில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 201 ஆக அதிகரித்துள்ளது.

(எ-110)

# நாடாளுமன்றத்தின் தொற்று எண்ணிக்கை 9ஆக எகிறியது



கொழும்பு, ஜன.18

நாடாளுமன்றப் பணிக்குழாமினரிடையே மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் தொற்று உறுதியானவர்களது எண்ணிக்கை 9ஆக அதிகரித்துள்ளது.

அமைச்சர், இராஜாங்க அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்ட பின்னணியில் நாடாளுமன்றப் பணிக்குழாமினரை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தும் விசேட வேலைத்திட்டம் கடந்த நாள்களில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. கடந்த 13 மற்றும் 15ஆம் திகதிகளில் நாடாளுமன்ற வளாத்தில் இடம்பெற்ற இந்த விசேட செயற்றிட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட நாடாளுமன்றப் பணிக்குழாமினர் 943 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனைக்கான உயிரியல் மாதிரிகள் பெறப்பட்டிருந்தன. தற்போதைய நிலையில் நாடாளுமன்றப் பணிக்குழாமினர் ஐவருக்கும், நாடாளுமன்ற பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் நால்வருக்கும் என 9 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது என நாடாளுமன்றத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னர் வந்த செய்தி 7 ஆம் பக்கத்தில்

(ப-22)

## மேல் மாகாணத்தில் விரைவில் பாடசாலை ஆரம்பம்

கொழும்பு.ஜன.18

மேல் மாகாணத்தில் பல பகுதிகளில் பாடசாலைகளை கல்வி நடவடிக்கைகளுக்காக மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்று கல்வியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பல பகுதிகளில் கொரோனா பரவல் ஆபத்தில்லை என்பதால் பாடசாலைகளை மூடிவைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. அடுத்த இரண்டு வாரங்களுக்குள் மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து தரங்களையும் சேர்ந்த பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-இ)


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 | 17 |
| 10 | 01 |
| 1972 | 2021 |

### திருமதி சத்தியமூர்த்தி நந்தினி (கலா)

கைதடியை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை 23-DR.EA கூரே மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியமூர்த்தி நந்தினி (கலா) அவர்கள் நேற்று (17.01.2021) ஞாயிற்றுக்கிழமை காலமாகினார்.

அன்னார் திரு K.S பென்னம்பலம் (உரிமையாளர் வெலிகம ஸ்ரோர்ஸ் கொழும்பு, எரிபொருள் நிரப்பு நிலையம் -கைதடி) காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், திரு திருமதி சுப்பையா தம்பதியினரின் அன்பு மருமகளும், திரு S.சத்தியமூர்த்தி (உரிமையாளர் கொழும்பு தர்சிகா யுவல்லர்ஸ், தேவிகா யுவல்லர்ஸ், கவினாஸ் யுவல்லர்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும், நிலோஸ் (கபில்-டாக்டர் அவுஸ்ரேலியா), நிதுஜா (கபினா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுமதி (அவுஸ்ரேலியா), வசந்தி (நியூஸிலாந்து), சுகந்தன் (எரிபொருள் நிரப்பு நிலையம்-கைதடி) ஆகியோரின் சகோதரியும், சிவசண்முகராசா, மோகன்ராஜ், உருத்திரா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பு மயானத்தில் நேற்று (17.01.2021) ஞாயிற்றுகிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
P.சுகந்தன்
(சகோதரன்)

கைதடி.
077 898 8836

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 21 | 17 |
| 01 | 01 |
| 1964 | 2021 |

### பெரியதம்பி ஜெயந்தன்

சுன்னாகம் ஐயனார் கோயிலடியை பிறப்பிடமாகவும் வரியப்புலம் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயனார் கோயிலின் தர்மகர்த்தா ஆகிய ஜெயந்தன் (ஸ்ரீ) நேற்று (17.01.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயனார் கோயில் தர்மகர்த்தாவும் பூசகரும் ஆகிய பெரியதம்பி செல்லம்மா ஆகியோரின் இளைய மகனும், சண்முகம் சிவபாக்கியம் ஆகியோரின் மருமகனும், சிவானந்தினியின் அன்புக் கணவரும், வாமதேவன், காலஞ்சென்ற லோகநாதன் (துரை) ஆகியோரின் அன்புத் தம்பியாரும், சிவனேஸ்வரன், சிவனேஸ்வரி, சிவாநந்தன், சிவபாலகிருஷ்ணன், காலஞ்சென்ற புஸ்பராணி, விஜிதா, விஜயலலிதா, காலஞ்சென்ற தெய்வேந்திரம், திலோஜினி, நிர்மலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2021) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, கொத்தியாலயடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
021 224 0776

## ஓராண்டு நினைவஞ்சலி

### அமரர் தணிகாசலம் சற்குணபாலதேவி



தோற்றம் 01.01.1950 — உதிர்வு 30.01.2020

திதி:பஞ்சமி (18.01.2021)

ஆறாத்துயரில் ஆண்டொன்று கழிந்ததம்மா
மீளாத்துயில் கொண்டு எமை ஏன்
நீர் பிரிந்தீர்!
நிதம் உனைத் தேடியலைகின்றோம்...
நிழலும் காணாது நிர்க்கதியானோமே
ஆண்டவன் சந்நிதியில் உங்கள்
ஆத்மா சாந்திபெற வேண்டலைத்தவிர
வேறெதுவும் முடியவில்லை

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

புது வீதி, ஆறுகால் மடம்.

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 | 17 |
| 03 | 01 |
| 1933 | 2021 |

### வேலுப்பிள்ளை சிவபாதம்

மணல்தரை வீதி, கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை வீதி கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவபாதம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற இராசையா செல்லம்மா தம்பதியினரின் மருமகனும், சிவகரன் (ஜேர்மனி), சிவாஸ்கரன் (டென்மார்க்), அமுதரசி (நோர்வே), சிவராமன் (டென்மார்க்), சிவரூபன் (பின்லாந்து) ஆகியோரின் தந்தையும், சிவரஞ்சனி, சிவரூபி, சுரேஸ், சுதா, சுதாமதி ஆகியோரின் மாமனாரும், வினுசியா, லக்சியா, சஞ்சய், அதிசயன், யாதவி, அன்சலினா, சாருஜன், விகான் ஆகியோரின் பேரனும், தங்கச்சியம்மா, தம்பிஜயா, சிவலிங்கம் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் பரிமளாதேவி, மகேஸ்வரி, பூமலர், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், தவராசலிங்கம் மற்றும் பாலச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2021) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 221 5506

**பெண் வேலையாள்கள் தேவை**

நல்லூரில் இயங்கும் சிற்றுண்டிச்சாலைக்கு
றோல், வடை, பற்றீஸ் மேக்கர், காசாளர்,
வெயிட்டர்ஸ் தேவை.
**074 159 6978**

**வேலையாட்கள் தேவை**

கொத்து ரொட்டி, **Fried Rice**, பரொட்டா மற்றும் சிற்றுண்டி வகை தயாரிக்கத் தெரிந்தவர்கள் உடன் தேவை (ஆண்).

**Ricoh**
Coffee & Kitchen

KKS வீதி சத்திரச்சந்தி,
யாழ்ப்பாணம்.
077 623 8129

**பராமரிப்பு பணிப்பெண்கள் தேவை**

**சாயி நோயாளர் பராமரிப்புச் சேவை**
**ஆனைக்குட்டி மதவடி லேன், தெல்லிப்பழையில்**
அமைந்துள்ள சாயி நோயாளர் பராமரிப்புச் சேவையின் ஊடாக வீடுகளில் நோயாளர்களைப் பராமரிப்பதற்கும் வீட்டு வேலைகள் (சமையல் உட்பட) செய்வதற்கான பணிப்பெண்கள் தேவை. ( வயது: 25 - 55)
தொடர்பு: **077 358 8069, 077 480 0039**

**அடகுநகை விற்பனை அறிவித்தல்**
**ராஜ் ஜுவல்லர்ஸ் திருநெல்வேலி**

**முக்கிய அறிவித்தல்**

15.12.2019 ஆம் திகதி தொடக்கம் 15.02.2020 வரை அடகுவைத்த நகைகளை 18.02.2021 க்கிடையில் மீட்டுக்கொள்ளவும். அல்லது முழு வட்டியையும் செலுத்தி புதுப்பித்துக்கொள்ளவும்.
தவறின் 18.02.2021 ஆந் திகதி விற்பனை செய்யப்பட்டுவிடும். அதன் பின் எக்காரணம் கொண்டும் மீட்க முடியாது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**இல.31C ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி**
(சந்தைக்கு அருகில்)
**021 221 7287, 076 636 1238**

# மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு; அதில் ஏற்றத்தாழ்வுகள் எதுவும் வேண்டாம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு,ஜன.18

மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும். அவற்றில் அடிப்படைப் பிரச்சினைகள், தேசிய பிரச்சினைகள் என்று ஏற்றத்தாழ்வுகள் பார்த்தால் முரண்பாடுகள் மாத்திரமே மிகுதியாகும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:எதிர்க்கட்சியின் செயற்பாடு முரண்பாடுகளை ஏற்படுத்துவது என அநேகமானோர் கருதுகின்றார்கள். வரலாற்றில் இதுவரை காலமும் செயற்பட்ட எதிர்க்கட்சிகளைக் கருத்தில்கொண்டு அவர்கள் அவ்வாறான நிலைப்பாட்டில் உள்ளார்கள். இருப்பினும் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சி மாறுபட்ட எதிர்க்கட்சியாகச் செயற்படும். அரசின் தவறான செயற்பாடுகளுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்துவோம். சிறிய எதிர்க்கட்சியாகச் செயற்பட்டு நாடு தழுவிய ரீதியில் ஜனநாயகத்துக்கான போராட்டத்தை முன்னெடுக்க முடியும். பிரச்சினைகளை ஏற்படுத்தி தவறான வழியில் இலக்கை அடைவது எதிர்க்கட்சியின் செயற்பாடல்ல. மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு எதிர்க்கட்சியாகச் செயற்பட்டும் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும். மக்களின் பிரச்சினைகளைப் பகிரங்கப்படுத்தி அதனை உயர்மட்ட அரசியல் வரை எம்மால் கொண்டு செல்ல முடியும். நாட்டு மக்களின் பிரச்சினைகள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சி கவனம் செலுத்தும். தேசிய பிரச்சினை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டும். ஏனைய பிரச்சினை குறித்து ஏனையோர் பேச வேண்டும் என அரசியல் களத்தின் பிரதிவாதிகள் தெரிவிக்கின்றார்கள். நாட்டு மக்களின் பிரச்சினைகளை தேசிய பிரச்சினை என்ற கோணத்திலேயே நான் பார்ப்பேன். தேசிய பிரச்சினை, மாகாணப் பிரச்சினை, மாவட்டப் பிரச்சினை, பிரதேச பிரச்சினை என்ற வேறுபாடுகள் ஏதும் கிடையாது. அதிகாரம் இல்லாவிடினும் எம்மால் ஒரு தீர்வைப் பெற்றுத்தர முடியும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஆகவே, மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையும் தேசிய பிரச்சினையாகவே கருதுவேன். பிரச்சினைகளை ஒருபோதும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது என்றார்.

(ப-22)

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி- 45 ரூபாய்
தொடர்புகளுக்கு- 077 334 1281

**துயர் பகிர்வு**

எமது இசையாசிரியர். கழக அங்கத்துவ ஆசிரியை **திருமதி ரூபினி இரவீந்திரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் திசைவீரசிங்கம் ரூபசிங்கம்**

07.01.2021 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

**யாழ் கல்வி வலய**
**இசையாசிரியர் கழகம்.**

**துயர் பகிர்வு**

எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியை **திருமதி ஜீவனா விஸ்னுவர்த்தனன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் இரத்தினம் சிவலிங்கம்**

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

**யாழ் கல்வி வலய**
**இசையாசிரியர் கழகம்.**




**காரைநகர் - பயிரிக்கூடல்**

# அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி கோவில்
# மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2021

முருகனடியார்களே,

**எமது ஆலயத்தின் மஹோற்சவம் சார்வரி வருஷம் தை மாதம் 06ஆம் நாள் (19-01-2021) செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாட்கள் உற்சவம் நடைபெறும்.**

**மஹோற்சவ குரு:**
**சிவஸ்ரீ கு. சண்முகராஜக்குருக்கள் (ஆலய குரு)**

**கொடியேற்றம் காலை 11.00 மணிக்கு இடம்பெறும்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18-01-2021 | திங்கட்கிழமை | சாந்திக் கிரியைகள் | 27-01-2021 | புதன்கிழமை | தேர்த் திருவிழா |
| 19-01-2021 | செவ்வாய்க்கிழமை | கொடியேற்றம் | 28-01-2021 | வியாழக்கிழமை | தீர்த்தம், கொடியிறக்கம் |
| 25-01-2021 | திங்கட்கிழமை | வேட்டைத் திருவிழா | 29-01-2021 | வெள்ளிக்கிழமை | பிராயச்சித்த அபிஷேகம் |
| 26-01-2021 | செவ்வாய்க்கிழமை | பெரிய சப்பரம் | 31-01-2021 | ஞாயிற்றுக்கிழமை | வைரவர் பொங்கல் |

**தினமும் திருவிழா நேரம்: பகல் திருவிழா ▸ காலை 8.30 - 12.30 ▸ இரவுத் திருவிழா 6.00 - 9.00**

**அடியார்கள் அனைவரும் வருகைதந்து எம்பெருமானின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.**

**குறிப்பு:** பொது சுகாதார விதிமுறைப்படி மஹோற்சவம் நடைபெறும்.

**காரைநகர்** **திருவிழா உபயகாரர்கள்**

POSTGRADUATE DIPLOMA IN EDUCATION (PART TIME) COURSE 2020/22

Closing date for receiving applications for the above course is extended up to 29.01.2021

Registrar
University of Jaffna


## துப்பாக்கி முனையில் வங்கியில் கொள்ளை !



கம்பஹா. ஜன.18

கம்பஹா மரிஸ் வத்த வீதியில் தனியார் நிதி நிறுவனத்தில் துப்பாக்கி முனையில் 40 மில்லியன் ரூபா பெறுமதியான நகை, மற்றும் பணத்தை கொள்ளையடித்த சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேகநபர்கள் நிதி நிறுவனத்தில் வைப்பாளர்களாக நுழைந்து, ஒரு துப்பாக்கி மற்றும் கைக்குண்டைக் காட்டி, நிதி நிறுவன ஊழியர்களை மிரட்டி கொள்ளையடித்து சென்றுள்ளனர். கொள்ளையர்கள் நிதி நிறுவனத்திலிருந்து 9 இலட்சம் ரூபா பணத்தையும், 390 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கத்தையும் கொள்ளையிட்டுள்ளனர்.

(ற-இ)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் திருமதி
**சர்வலோசினி திருநாவுக்கரசு**

தோற்றம் 01 . 12 . 1936
மறைவு 19 . 12 . 2020

ஆயிரம் உறவுகள் வரலாம் போகலாம்
ஆனால், அம்மா எனும் உறவென்பது
அழியாது நிலைத்திருக்கும்.
அம்மாவின் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது இறுதிச்சடங்கில் பங்கு பற்றியவர்களுக்கும், தொலைபேசி, மின் அஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல உதவிகள் ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
தகவல்: மகள்- மாலினி கிரிதரன்

## முதலாம் ஆண்டு நினைவாக



பிறப்பு 29 . 04 . 1955
இறப்பு 30 . 01 . 2020

**திரு. தங்கராஜா அன்பானந்தன்**
(யாழ். பல்கலைக்கழக முன்னாள் பிரதிப் பதிவாளர்)
திதி: வளர்பிறை பஞ்சமி

அப்பா!

ஆண்டு ஒன்றாகியும் எங்களுக்கு உங்களை மறக்க முடியவில்லை. கடைசி மூச்சிருக்கும் வரையும் குடும்பத்தை காத்து வந்தீர்கள் அப்பா!

உங்கள் அம்மா, உடன்பிறப்புகள், பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர், அரிமாக் கழகத்தினர் உங்கள் அன்பான பண்பான உறவினைத் தேடுகின்றனர் அப்பா!

மற்றும் கொரோனா பெருந்தோற்றின் காரணமாக
தனிப்பட்ட முறையில் அழைப்பினை விடுக்கமுடியாததை
எண்ணி மனம் வருந்துகின்றோம்

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

**சின்னத்துரை குமரவேல்** அவர்கள்
(விவாகப்பதிவாளர், சமாதான நீதவான்)
சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினர்



எமது சங்கத்தின் நீண்டகால தலைவரும் தற்போதய இயக்குநர் சபை உறுப்பினர் ஆகிய சின்னத்துரை குமரவேல் அவர்களது மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எமது சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
**சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்**

## மரண அறிவித்தல்



**சபாரத்தினம் தேவராஜா** (தேவர் ஐயா)

கைதடி கிழக்கை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட சபாரத்தினம் தேவராஜா (தேவர் ஐயா) நேற்று (17.01.2021) ஞாயிற்றுக்கிழமை காலை சிவ ஐக்கியம் ஆகிவிட்டார்.

அன்னார் சபாரத்தினம் - தெய்வநாயகி தம்பதியரின் மூத்த மகனும், பரராசசிங்கம் - விக்கினேஸ்வரி தம்பதியரின் மூத்த மருமகனும், சுலோசனாவின் அன்புக் கணவரும், கண்மணிதேவி, சேனாதிராஜா (லோகன்), பவளம், சிவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், லக்ஷி, நிறஞ்சனி (UK), ரஜீதன், ரவிதரன், கீதவாணி, சுதர்சனி ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தகோபன், சதீஸ்குமார் ஆகியோரின் அன்பு மாமனும், அருந்தவராசா, பரணி, கனகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் சிவ ஐக்கிய கிரியைகள் இன்று (18.01.2021) திங்கட்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று கைதடி ஊத்தல் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

கைதடி கிழக்கு,
கைதடி.

தகவல் :
குடும்பத்தினர்.

## ஈராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 . 01 . 1953
மறைவு 12 . 01 . 2019

**அமரர் சபாரட்ணம் சிறீகரன்**
Bsc (Agriculture ) Peradeniya
P.G.D.E (Jaffna)
(இளைப்பாறிய ஆசிரியர் - உயிரியல்- யா/பரியோவான் கல்லூரி)

எங்களுக்கு நல்ல பல ஆலோசனை வழங்கி ஆளுமை உள்ள ஆசிரியராக சிறந்த மாணவர்களை உருவாக்கிய எம் குடும்ப விளக்கே ஆண்டு இரண்டு கடந்தாலும் அழியாது உங்கள் நினைவு வலிகளோடு நாங்கள் உங்கள் தடம் தேடி....

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!

குடும்பத்தினர்.

## சுடப்பட்ட....

என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவருககும், மனைவிக்கு இடையே நடைந்த மோதலில் மனைவியின் உறவினர் ஒருவர் இவர் மீது இடியன் துப்பாக்கியால் சூடு நடத்தியியிருந்தார். அதில் ஜெயசுதன் படுகாயமடைந்தார். இவர் வவுனியா பொது மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். கடந்த ஒருவாரமாகச் சிகிச்சை பெற்ற அவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-110)

## தவறான....

புதுக்குடியிருப்பு, கோம்பாவில், 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 36 வயதுடைய மருத்துவர் ஒருவரே தவறான முடிவெடுத்து அவரது வீட்டில் உயிரை மாய்த்துள்ளார். இவர் ரஷ்யாவில் மருத்துவப் படிப்பை நிறைவு செய்து, முல்லைத்தீவு பொது வைத்தியசாலை, நட்டாங்கண்டல், தேவிபுரம் ஆகிய மருத்துவமனைகளில் சேவையாற்றி வந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ளி-2)

## டிப்பருடன்....

யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனமும், தருமபுரம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகியுள்ளன. மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே உயிரிழந்துள்ளார்.

விபத்துக்குள்ளான டிப்பர் வாகனச் சாரதி அங்கிருந்து தப்பியோடியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த விபத்துத் தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-113)

## பூநகரியில்...

பெண் வயிற்றுப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்டுள்ளார். வீட்டில் குருதி வெள்ளத்தின் மத்தியில் உயிரிழந்த நிலையில் அவர் காணப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலையை அவரது கணவரே செய்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. சந்தேகத்தின் அடிப்படையில் அவர் கைது செய்யபட்டுள்ளார். அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-6)

## ஐ.நாவை....

எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கை அரசு மாற்று நடவடிக்கைகளைக் கையாளத் தீர்மானித்துள்ளது. அதற்கமையவே ஆணைக்குழுவை அமைப்பதற்கு ஜனாதிபதி கோத்தாபய நடவடிக்கை எடுத்துள்ளார்.

இன்று கூடவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். இந்த ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படும் உறுப்பினர்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட வாய்ப்புகள் உள்ளன என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, இந்த ஆணைக்குழு அடுத்துக் கூடவுள்ள ஜெனிவாக் கூட்டத் தொடருக்கு முன்னர் இலங்கையின் முன்னைய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை ஆராய்ந்து புதிதாக தீர்மானம் ஒன்றை வரையவும், அதை ஜெனிவாவில் சமர்ப்பித்து அடுத்த கட்டமாக இலங்கை கையாளவுள்ள நடவடிக்கைகள் குறித்து தெளிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் கெஹலிய தெரிவித்தார். (எ-22)

## பொங்குதமிழ்....

மற்றும் தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் என கோரிக்கைகளை வலியுறுத்தி 2001ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி இராணுவ அடக்குமுறைக்கு மத்தியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட பொங்குதமிழ் நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் பேரெழுச்சியாகத் திரண்டனர்.

அந்த மக்கள் எழுச்சியின் 20ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொங்குதமிழ் நினைவுத் தூபி முன்றலில் கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் தலைமையில் நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் பொங்குதமிழ் நினைவு அறிக்கையும் வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

முள்ளிவாய்கால் நினைவுத்தூபி இடித்து அழிக்கப்பட்டு தமிழ் மக்கள் தங்களது நினைவு உரிமையும் மறுக்கப்பட்ட ஒரு காலப் பின்னணியில் நாங்கள் பொங்கு தமிழ் பிரகடனத்தின் 20ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூருகின்றோம்.

2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம் ஆண்டு தமிழ் மக்கள் தங்களது இன உரிமைகளை வலியுறுத்தி, அவற்றை உலகெங்கும் பறைசாற்ற மிகுந்த எழுச்சியோடு இராணுவ அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஒன்றுகூடினார்கள். அவர்க்ள் ஒன்றுகூடி வந்த போது மேற்கொண்ட பிரகடனத்தை நாம் இங்கு கல்வெட்டாக வடித்து வருடா வருடம் நினைவுகூருகின்றோம்.

தமிழ் மக்களது அபிலாசைகளான சுய நிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்கின்ற விடயங்களை இந்த பிரகடனம் உள்ளடக்கி நிற்கின்றது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்த இந்த பொங்குதமிழ் உலகின் பல நாடுகளிலும் அங்கங்கு வாழும் தமிழ் மக்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு உலகம் முழுவதற்கும் தமிழ் மக்களது அடிப்படை அபிலாசைகளை எடுத்துரைத்து வருகின்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகத்தின் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டை இந்த பொங்கு தமிழ் நிகழ்வும், இங்கு நிறுவப்பட்டிருக்கும் பொங்கு தமிழ் பிரகடன கல்வெட்டும் பறைசாற்றி நிற்கின்றது. யாழ்ப்பாண பல்கலைக்கழகம் எடுத்து வந்த 'தமிழ்த்தேசிய நிலைப்பாடு' அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள இக்கால கட்டத்தில் நமது பொங்கு தமிழ் பிரகடன நினைவுகூரல் முக்கியத்துவம் பெறுகின்றது.

மீண்டும் ஒருமுறை இந்த வருடமும் சுய நிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் இவையே எமது மூச்சு என மீண்டும் உரத்து ஒலிப்போம் என்றுள்ளது. (எ-20)

## காணி...

தீபன் மற்றும் வேலணை பிரதேச சபை உறுப்பினர் க.நாவலன் ஆகியோர் அழைப்பு விடுத்துள்ளனர்.

யாழ். ஏழாலையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடக சந்திப்பை மேற்கொண்ட கஜதீபன், இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது;

முப்படையினரின் தேவைகளுக்காகத் தொடர்ச்சியாக எமது மக்களின் சொந்தக் காணிகள் தொடர்ச்சியாக சுவீகரிக்கப்படுகின்ற நிலைமை நீடிக்கின்றது. கடந்த காலங்களிலும் மக்களின் காணிகளை சுவீகரிப்பதற்காக அளவீடு செய்ய முற்பட்டபோது மக்களின் எதிர்ப்பால் அந்த நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன. எனினும், அதன் தொடர்ச்சியாக மண்டைதீவு மற்றும் மண்கும்பான் பகுதிகளில் மக்களுடைய காணிகள் கடற்படையின் முகாம் அமைப்பதற்காக சுவீகரிப்புச் செய்வதற்காக அளவீடு செய்யப்படவுள்ளது. இன்று திங்கட்கிழமை மண்டைதீவிலும், நாளை செவ்வாய்க்கிழமை மண்கும்பானிலும் அளவீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எமது மக்களின் காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்கு எதிராக இன்று காலை 8.30 மணிக்கு மண்டைதீவிலும் நாளை காலை 8.30 மணிக்கு மண்கும்பானிலும் பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் அணிதிரண்டு காணி சுவீகரிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டும் .என்றார்

இது தொடர்பாக வேலணை பிரதேச சபை உறுப்பினர் க.நாவலன் தெரிவித்துள்ளதாவது

தமிழர் தாயகத்திலுள்ள பொதுமக்களுக்கு உரித்தான பாரம்பரியமிக்க நிலங்களை ஆக்கிரமித்து சிறிலங்கா ராணுவம் மற்றும் கடற்படையினரின் முகாம்களை விஸ்தரிக்கும் வகையில் திட்டமிட்டு பல நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது ராஜபக்ச அரசாங்கம். ரணில் மைத்திரி ஆட்சிக்காலப்பகுதியில் இவ்வாறான நடவடிக்கைகள் பலவற்றை அந்த அரசு முன்னெடுத்திருந்தபோதிலும் அவற்றைத் தமிழ்த் தேசிய கட்சிகள், செயற்பாட்டாளர்கள் , பொதுமக்களென அனைவரும் ஒன்றிணைந்து இலகுவாக முறியடித்திருந்தோம் . அந்தக் காலப்பகுதியில் சாதாரணமாக பத்து பேர் ஒன்று கூடி எதிர்ப்பு போராட்டத்தைத் முன்னெடுத்தபோது நில அளவை திணைக்களத்தினர் பின்வாங்கிச் சென்றனர். ஆனால் தற்போதைய நிலைமை அவ்வாறில்லை. குறைந்தபட்சம் ஆயிரம் பொது மக்களாவது காணிகளை அளவிடுகின்ற பிரதேசத்தில் ஒன்று திரண்டு எமது பலத்தை ராஜபக்ச அரசுக்கு மாத்திரமல்லாது சர்வதேசத்துக்கும் காட்ட முனைய வேண்டும் .

இது வெறுமனே மண்டைதீவுக்கு உரிய பிரச்சினை அல்ல. ஒட்டுமொத்த தமிழர் தாயகத்திலும் தொடரவுள்ள இன அழிப்பின் ஓர் அங்கமான நடவடிக்கையே இது. அரசியல், தனிமனித விருப்பு வெறுப்புகளை களைந்து ஒரே குரலில் எமது எதிர்ப்பை நாளை அனைவரும் வெளிப்படுத்துவோம் என்றார். (ப)

## 10 வயது...

மரா இலுப்பைக் கிராமத்தைச் சேர்ந்த 10 வயதுச் சிறுமி ஒருவருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சிறுமியின் தாய் வவுனியா வைத்தியசாலையில் பணியாற்றுகின்றார். இவருக்கு அண்மையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

அதையடுத்து, அவரதுகுடும்பத்தினருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் சிறுமிக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-110)

## ஜெனிவா...

முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது இந்த நிலைமை ஏற்படுவதற்கு ராஜபக்ச அரசே முழுப் பொறுப்பு. நாட்டைப் பாதுகாக்கும் வகையில் நல்லாட்சி அரசு வகுத்திருந்த கொள்கைகளை மீண்டும் ஆட்சிக்கு வந்த ராஜபக்ச அரசு உதாசீனம் செய்திருந்தது. அதனாலேயே இலங்கை இன்று சர்வதேச அரங்கில் தலை குனிய வேண்டிய நிலைக்குச் சென்றுள்ளது.

சிறுபான்மையின மக்களின் உரிமைகளைப் பறிப்பதன் மூலமும், சர்வதேசத்தைப் பகைப்பதன் ஊடாகவும் பெரும்பான்மையின மக்களான சிங்களவர்களின் மனதை வெல்ல முடியும் என்று ராஜபக்ச அரசு தப்புக்கணக்குப் போட்டுள்ளது. இந்தத் தப்புக்கணக்கு நாட்டைப் படுகுழியில்தான் தள்ளும் என்பதை அரச தரப்பினர் புரிந்துகொள்ள வேண்டும். சிங்கள மக்களின் முழு ஆதரவுடன் ஆட்சிக்கு வந்தோம் என்று மார்தட்டிய இந்த அரசு, மிகச் சொற்ப காலத்திலேயே அந்த மக்களின் நம்பிக்கை இழந்து தவிக்கின்றது.

சிறுபான்மையின மக்களைப் பழிவாங்கும் இந்த அரசு, தற்போது தம்மை விமர்சிக்கும் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. நீதி, நேர்மை, நியாயம் இல்லாத சர்வாதிகார ஆட்சியே இலங்கையில் தற்போது இடம்பெறுகின்றது.

இதற்கெல்லாம் நாம் விரைவில் முடிவு கட்டியே தீருவோம். ஆட்சி அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் கைப்பற்றும். அதற்கான திட்டங்களை வகுக்க ஆரம்பித்துள்ளோம் என்றார். (எ-22)

## வடக்கில்...

மாவட்டத்தில் மூவருக்கும், வவுனியா மாவட்டத்தில் மூவருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று 420 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 8 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-இ)



# பிரமாண்டமான அணிவகுப்பு; வடகொரியா திடீர் மிரட்டல்!

பியாங்யாங், ஜனவரி. 18
கொரோனாப் பெருந்தொற்று, அதன் தொடர்ச்சியான முடக்க நிலை, பொருளாதார இழப்பு என்று உலக நாடுகள் பெரும்பாடு பட்டுக்கொண்டிருக்கையில் மிகப் பெரும் இராணுவ அணிவகுப்பை திடீரென அரங்கேற்றியுள்ளது வடகொரியா.

வடகொரியாவின் தொழிலாளர் கட்சியின் 8ஆவது ஆண்டு நேற்று முன்தினம் அந்த நாட்டில் கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டே இந்தப் பெரும் இராணுவ அணிவகுப்பு நடத்தப்பட்டுள்ளது.

இந்த அணிவகுப்பில் தன்னிடமுள்ள இராணுவத் தளபாடங்களை வடகொரியா காட்சிப்படுத்தியுள்ளது. அத்துடன் பல்லாயிரம் இராணுவச் சிப்பாய்களும் இந்த அணிவகுப்பில் கலந்துகொண்டனர்.

வடகொரியாவின் ஜனாதிபதியான கிம் ஜோங் உன் சிறப்பு அதிதியாக இந்த அணிவகுப்பைப் பார்வையிட்டார். பல்லாயிரம் மக்கள் ஒன்றுதிரண்டு இந்த அணிவகுப்பைக் கண்டு மகிழ்ந்தனர்.

கொரோனாத் தொற்று இல்லாத நாடுகளின் பட்டியலில் தற்போது வடகொரியாவும் இருக்கலாம் என்று கருதப்பட்டது. எனினும் அந்த அரசால் உத்தியோகபூர்வமாக தகவல்கள் எவையும் வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில் பல்லாயிரம் மக்களை ஒரே இடத்தில் ஒன்றுகூட அனுமதிக்கப்பட்டதை அடுத்து வடகொரியா கொரோனா இல்லாத நாடாக இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# வுகான் மாகாணத்தில் கொரோனா ஆய்வுகள்

## நிபுணர் குழு முகாம்

பீஜிங், ஜன. 18
கொரோனாப் பெருந்தொற்றின் தோற்றம் குறித்து ஆய்வு நடத்துவதற்காக சீனாவின் வுகான் மாகாணத்துக்கு உலக சுகாதார அமைப்பின் நிபுணர்குழு சென்றடைந்திருந்த நிலையில் அந்தக் குழு தன் பணிகளை அங்கு ஆரம்பித்துள்ளது.

உலகமெங்கும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள கொரோனாப் பெருந்தொற்றின் தோற்றம் சீனாவின் வுகான் மாகாணம் என்பதே இதுவரையிலான பொதுவான கருத்து. அதிலும் சீனா கொரோனாவின் உண்மைத் தகவல்களை மறைத்தது என்றும் இந்த வைரஸ் சீனாவால் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டது என்றும் பலவிதமான கருத்துக்களும் உள்ளன. இதனால் வைரஸின் தோற்றம் குறித்தும் ஏனைய விடயங்கள் குறித்தும் ஆய்வு நடத்த தமது குழுவை சீனாவுக்குள் அனுமதிக்க வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது.

இந்தக் கோரிக்கை தொடர்பிலான நீண்ட இழுத்தடிப்புக்குப் பின்னர் அந்தக் குழுவை சீனாவுக்குள் அனுமதித்துள்ளது சீன அரசு. குறித்த நிபுணர் குழு தற்போது தன் ஆய்வுப் பணியை ஆரம்பித்துள்ளது. (ம)



# சீன ஆய்வகங்களில்தான் தோன்றியது கொரோனா!

## அமெரிக்கா மீண்டும் குற்றச்சாட்டு

வொஷிங்டன், ஜன. 18
சீனாவின் ஆய்வகங்களில்தான் கொரோனா வைரஸ் தோற்றம் பெற்றது என்று அமெரிக்கா மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளது. அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் பாம்பியோ இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

கொரோனா வைரஸின் தோற்றம் குறித்து ஆய்வு நடத்துவதற்காக உலக சுகாதார அமைப்பின் நிபுணர் குழு சீனாவின் வுகான் நகருக்குள் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது தனிமைப்படுத்தலில் அந்தக் குழுவினர் உள்ளனர். தனிமைப்படுத்தல் காலத்தில் விசாரணைக்குத் தேவையான பொறிமுறைகள் மற்றும் களப்பயணங்கள் தவிர்ந்த முதல்கட்ட விசாரணைகளை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். இந்த நிலையில் அமெரிக்கா இவ்வாறு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

அமெரிக்காவின் தற்போதைய அதிபரான ட்ரம்ப், கொரோனா வைரஸை 'சைனீஸ் வைரஸ்' என்று அழைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



# மீண்டும் முசவேனி

ஆபிரிக்க நாடான உகாண்டாவில் 1986ஆம் ஆண்டில் இருந்து ஆளும் கட்சியாக இருந்து வரும் என்.ஆர்.எம் கட்சி மீண்டும் ஆட்சியமைத்துள்ளது. 76 வயதுடைய அதிபர் யோவேரி முசவேனி ஜனாதிபதியாக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் தொடர்ச்சியாக 6ஆவது தடவையாக அவர் ஜனாதிபதியாகின்றார். முசவேனிக்கு 59 சதவீத வாக்குகளும், பாபி வைனுக்கு 35 சதவீத வாக்குகளும் கிடைத்தன என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஆனால் இந்தத் தேர்தலில் மிகப்பெரிய முறைகேடுகள் மற்றும் அடக்குமுறைகள் நடந்திருக்கின்றன என எதிர்க்கட்சியான என்.யு.பி கட்சியின் தலைவர் பாபி வைன் குற்றஞ்சாட்டியுள்ளார். (ம)

நோர்வேயில் 23 வயோதிபர்கள் மரணம் :

# முதுமையின் தீவிர நோய் நிலைமையில் தடுப்பூசி உயிராபத்தை உண்டாக்கலாம்

ஒஸ்லோ, ஜன. 18
வைரஸ் தடுப்பூசி ஏற்றப்பட்ட பின்னர் நிகழ்ந்த 23; உயிரிழப்புகள் தொடர்பாகத் தாங்கள் தீவிர கவனம் செலுத்திவருகின்றோம் என்று நோர்வேயின் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

75-80 வயதுகள் தாண்டிய முதியவர்கள் 23 பேர் பைசர் பயோஎன்ரெக் தடுப்பூசி ஏற்றப்பட்ட ஓரிரு தினங்களில் உயிரிழந்துள்ளனர். அவர் களில் 13 பேரது மரணங்கள் முதியோர் பராமரிப்பகங்களில் பதிவாகியிருக்கின்றன. பிரேத பரிசோதனைகளின் போது தடுப்பூசியின் பொதுவான பக்க விளைவுகள் மரணத்துக்குப் பங்களித்திருக்கலாம் என்பது தெரியவந்துள்ளது என நோர்வேயின் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பிரான்ஸ் உட்பட பல ஐரோப்பிய நாடுகளில் வயோதிபர்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. எனினும் தடுப்பூசி யுடன் தொடர்புபட்ட மரணங்கள் அதிக எண்ணிக்கையில் பதிவாகிய செய்தி தற்போது நோர்வேயிலேயே முதலில் வெளியாகி உள்ளது. (ம)

கனினி திருத்தம்
நடமாடும் சேவை
076 300 5506



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.